Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-05 | 18-01-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை -335



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11120)

துரித கதியில் இயல்பு வாழ்வுக்குத் திரும்பும் வகையில்


# மக்கள் துயர் துடைப்பதும் அதிர்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதுமே எம்முன்னுள்ள முக்கியசவால்

## தாயகத்தைக் கட்டியெழுப்ப முன்வந்துள்ள புத்திஜீவிகள் மத்தியில் தேசியத்தலைவர்

**தற்போது எங்கள் முன்னுள்ள சவால் எமது மக்களின் துயர்களைத் துடைப்பதும் அவர்களைத் துரிதகதியில் இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதன் மூலம் மக்கள் அடைந்துள்ள அதிர்ச்சியிலிருந்து விடுவிப்பதுமேயாகும்.இவ்வாறு சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற் காக முன்வந்துள்ள புத்திஜீவிகளுடனான சந்திப்பின் போது தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக முன் வந்துள்ள புத்திஜீவிகள் மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன அவர்கள் நேற்று முக்கியமான ஆலோசனை நடாத்தினார். சந்திப்பில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த தமிழ் புத்திஜீவிகளை வரவேற்று அனர்த்த நெருக்கடியின்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## கனேடியப் பிரதமர் கல்முனைக்கு விஜயம்

தற்போது இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள கனேடிய பிரதமர் போல் மார்ட்டின் நேற்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேசினார்.

முன்னதாக அவர் கல் முனைப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பாதிப்புக்களை நேரில் பார்வையிட்டார். அவருடன் சிறிலங்காவுக்கான கனேடியத் தூதுவர் மற்றும் கனேடிய சுகாதார அமைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு வெளிநாட்டிலிருந்து பொருட்கள்; பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாம்

### -ஜே.வி.பி. கூறுகிறது

சுனாமி அனர்த்தத்திற்கு உதவுவதென்ற போர்வையில் விடுதலைப் புலிகளுக்கு ஏராளமான பொருட்கள் கொண்டு செல்லப்படுவதாக ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார். இந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பாரிய வாகனங்களைக் கூட கொண்டு சென்று உபயோகப்படுத்துகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது இலங்கையின் பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தல் எனச் சுட்டிக்காட்டியுள்ளார் அரசாங்கத்திற்கு கிடைக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இணைப்பு

கடலனர்த்தத்தில் சாவடைந்த போராளிகள், துணைப்படையினர்,



பொது மக்கள் நினைவாக கடற்புலிகளால் வெளியிடப்படும் வர்ணப் பிரசுரம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## த.பு.க, கூட்டமைப்பினருடன் கனேடியப் பிரதமர் சந்திப்பு

கனேடியப் பிரதமர் போல் மாட்டின் நேற்றுத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளையும்,தமிழ்க்கூட்டமைப்புப் பிரதிநிதிகளையும் கொழும்பில் சந்தித்துப் பேசியுள்ளார். பிற்பகல் 2.30 மணியளவில் ஹில்ரன் விடுதியில் இச்சந்திப்பு இடம்பெற்றது.இதன்போது கனடா உட்பட சர்வதேச நாட்டின் உதவிகள் பொருத்தமான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும்வரை அரசசார்பற்ற அமைப்புக்களினூடாக வழங்கப்பட வேண்டுமென தமிழ்க்கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர்.

-சுனாமியால் ஏற்பட்டுள்ள-

## புவியியல் மாற்றங்கள் குறித்து பிரிட்டனில் நிபுணர் குழு ஆராய்வு

சுனாமி தாக்கத்தின் பின் ஏற்பட்டிருக்க கூடிய புவியியல் மாற்றங்கள் பற்றி ஆராய பிரிட்டனின் வரைபட அமைப்புக் குழுவினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இலங்கையின் தேசிய செய்முறைகளுக்கான நிலையத்தின் ஒத்துழைப்புடன் நில ஆராய்வு திணைக்களம் தொடர்ந்து ஆராய்வுகளை மேற்கொள்ள ஒழுங்குகளை செய்துள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் எழுச்சியுடன் பொங்குதமிழ் நிறைவு நாள் நிகழ்வு

பொங்குதமிழின் 4ஆம் ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் நேற்றுக் காலை 10.00 மணியளவில் யாழ். பல் கலைக்கழக மாணவ ஒன்றிய தலைவர் எஸ்.செல்வக்குமார் தலைமையில் கைலாசபதி கலையரங்கில இடம் பெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ் வாக பொதுச் சுடரினை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணை வேந்தா பேராசிரியர் மோகனதாஸ், யாழ் பல் கலைக்கழக ஊழியர் சங்கத்தலை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## திருமலையில் இடம்பெயர்ந்தோர் பட்டினி கனேடிய பா.உ.பார்வையிட்டு அதிர்ச்சி

### -அகதிகளுக்கான உணவை பதுக்கி வைத்துள்ள படையினர்

கனேடியப் பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் அவர்கள் நேற்றுமுன்தினம் திருமலைக்கு விஜயம் செய்தார். திருமலைக்கு வருகை தந்த அவர் பல அகதி முகாம்களிற்குச் சென்றதுடன் அங்குள்ள நிலைமைகளைக் கண்ணுற்று அதிர்ச்சியடைந்தார்.

குறிப்பாக நேற்றுமுன்தினம் பிற்பகல் நிலாவெளி, வேலூரிலுள்ள அகதி முகாமிற்கு விஜயம் செய்த மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் அங்குள்ள மக்களுடன் அளவளாவிய போது, அவர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### மரக்கன்றுகள் விற்பனைக்கு!

நல்லின சவுக்கு மரக்கன்று விற்பனைக்குண்டு. (கன்றின் விலை15/=) தொடர்புகளுக்கு:- முகாமையாளர், நாற்று உற்பத்தி மையம், கனகாம்பிகை அம்மன் கோவிலடி, இரணைமடு. (5557)

### உடன் தேவை

கிளிநொச்சி, டிப்போச்சந்தி திருநகருக்கு இடைப்பட்ட பகுதியில் A/L வகுப்பு (பௌதிகவியல்) நடத்துவதற்கு வீடு அல்லது அதற்கு அமைவான இடம் உடன் தேவை தொடர்பு:- ச.சதீஸ்குமார் 65 புகையிரத நிலைய வீதி,கிளிநொச்சி. (சி-5564)


# சுடுமணலில் எமக்காக உணவுடன் நின்றவர்கள் இன்று பேரலைக்கு பலியாகியுள்ளனர்

## - சுவிஸில் கேணல் கிட்டு நினைவு நிகழ்வில் விநாயகம்



கடலிலே போரை நிகழ்த்திவிட்டு கரை திரும்பும் போது சுடும் மணலிற்கு மத்தியிலும் சாப்பாட்டுடனும் இளநீர் குலைகளுடனும் காத்திருந்த மக்கள் இன்று ஆழிப்பேரலையின் கோரத்தால் பலியாகியும் அனைத்தையும் இழந்து நிற்கின்றனர் என சுவிசில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவு நிகழ்வில் தமிழீழ கடற்படையைச் சேர்ந்த விநாயகம் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் உடனடியாக ஆற்றிய பணிக்கு நன்றிகளை தெரிவிக்கிறோம். குறிப்பாக இளையவர்கள் ஆற்றிய பணிக்கு பாராட்டுக்களை தெரிவிக்கிறோம். தொடர்ந்தும் இளையோர் பணிகளை ஆற்ற வேண்டும்.நாம்போரைத் தொடுக்க மாட்டோம் போர் எம்மீது திணிக்கப்பட்டால் அப்போரை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 12ஆவது நினைவு எழுச்சி நிகழ்வு சுவிற்சர்லாந்தின் தலைநகரான பேர்ண் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தாயகத்தில் இருந்து சென்றிருந்த தமிழீழ கடற்படையைச் சேர்ந்த த.விநாயகம் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் திருமதி மங்கையர்க்கரசி சண்முகதாசன் ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளுக்கும் போராட்டத்தில் தம் முயிரை ஈகம்செய்தமாவீரர்களுக்கும் ஆழிப்பேரலையில் பலியான தாயக உறவுகளுக்குமான அகவணக்க நிகழ்வு நடைபெற்றது.பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் திருவுருவப் படங்களுக்கு இளைஞர்கள் அணிவகுத்துச் சென்று மலர்வணக்கம் செலுத்த மண்டபத்தில் நிறைந்திருந்த மக்கள் உணர்வுபூர்வமாக தமது மலர் வணக்கத்தைச் செலுத்தினர்.

அடுத்த நிகழ்வாக, தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளை கலைபண்பாட்டுக் கழக இசைக்குழுவினரால் எழுச்சி கானங்கள் இசைக்கப்பட்டன. “மீண்டும் மீண்டும் எழுவோம்”எனும் தலைப்பில் சுவிஸ்தமிழ்இளையோர் அமைப்புப் பிரதிநிதி சந்திரகுமார் ரஜீவ் வழங்கிய கவிதை இடம் பெற்றது. நர்த்தனா கலைக்கூட மாணவிகளினதும் பேர்ண் திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகளினதும் எழுச்சி நடனங்கள் இடம்பெற்றன. தமிழ் இளையோர் அமைப்பினரால் வர்ணப்பூங்கா எனும் சிறுவர்களுக்கான வர்ணந்தீட்டும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்வெளியீட்டினை தமிழ் இளையோர் அமைப்புப் பொறுப்பாளர் மகிந்தன் வெளியிட த.விநாயகம் பெற்றுக் கொண்டார். இந்நூலுக்கான வெளியீட்டுரையை கிருஸ்ணா அம்பலவாணர் நிகழ்த்தினார். . தொடர்ந்து த.விநாயகம் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில் கூறியதாவது: சர்வதேச நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளைகளை நிறுவுவதிலும் ஊடகங்களின் அவசியத்தை உணர்ந்து ஊடகங்களை உருவாக்குவதிலும் முனைப்புடன் செயற்பட்டவர் கிட்டு அண்ணா. தமிழீழப் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்புவதில் திறம்பட உழைத்தவர் என்பதையும் குறிப்பாக உள்நூர் உற்பத்தி வளத்தைப் பெருக்குவதில் முன்நின்று உழைத்தவர் அவர் தளபதி கேணல் கிட்டு அவர்கள் ஒரு கையில் துப்பாக்கியை ஏந்தி எதிரியை சுடும்போது மறுகையில் புகைப்பட கருவி தனது தொழிலை ஆற்றும். அவரது இழப்பு தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் தமிழினத்திற்கும் பாரிய இழப்பு என்றார் அவர். அவரது சிறப்புரையைத் தொடர்ந்து புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தமிழரின் தாரக மந்திரத்தை அனைவரும் வலது கரத்தை உயர்த்தி தெரிவிக்க நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

## அவசர கலந்துரையாடல்

நாளை (புதன்கிழமை) காலை. 9.30 மணிக்கு முல்லை வலய பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இடம் பெற இருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமூகம் தருமாறு பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தின் முல்லைத் தீவு வலயக் கிளை கேட்டுக் கொண்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கு தபாலகங்கள் நாளை முதல் இயங்கவுள்ளன

(வடமராட்சி கிழக்கு)

கடந்த 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி கடல் பேரலைகளினால் இடம்பெயர்ந்துள்ள வடமராட்சி கிழக்கு உபதபால் அலுவலகங்களான செம்பியன்பற்று,தாளையடி, ஆழியவளை, முள்ளியான், சுண்டிக் குளம் இவைகளில் சுண்டிக்குளத்தை தவிர ஏனைய நான்கு உபதபால் அலுவலகங்களும் நாளை முதல் வடமராட்சி கிழக்கில் இயங்க் உள்ளதாகத் தெரியவருகிறது. இவைகளில் முள்ளியான், ஆழியவளை இரண்டும் கட்டடத்துக்கு சேதங்கள் ஏற்படவில்லை. மற்றைய மூன்றும் முற்றாக அழிவடைந்துள்ளது. நாளை முதல் இவை தனியார் வீடுகளில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றும் இவ்வளவு நாட்களாக இவை பளை தபாலகத்திலிருந்தே செயற்பட்டு வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (11)

# புலிகள்,த.பு.கழகத்தினூடாகவே உதவிகள் வழங்கப்படவேண்டும்

## - யாழ். பொது அமைப்புகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டின் கரை யோரப் பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவிகள் அனைத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளூடாகவும், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினூடாகவும் வழங்க வேண்டும்மென யாழ்.மாவட்ட பொது அமைப்புகளும், மனித நேய அமைப்புகளும் வலியுறுத்தியுள்ளன.

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டின் கரையோரக்கிராமங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளை வழங்குவதற்கு ஜப்பான், கொரியா அமெரிக்கா,இந்தியா, நோர்வே, சுவீடன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற பல சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன.

எனினும் இவ்வாறான உதவிகள் இலங்கை அரசினூடாகப் பயன்படுத்தப்படும் போது பல்வேறு மோசடிகளும், புறக்கணிப்புகளும் இடம் பெறக் கூடியசாத்தியப்பாடுகள் உள்ளன. இதற்கு அண்மைக்கால அரசின் நடவடிக்கைகள் சான்றாக உள்ளன.எனவே மேற்படி விடயங்களைச் சுட்டிக் காட்டியே இவ்வமைப்புக்கள் சர்வதேசத்தின் மீள் கட்டுமான உதவிகள் புலிகள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களூடாக வழங்க்ப்படல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (33)

## - கிளி. பொன்னம்பலம் வைத்தியசாலையில் -

# தோல்நோய் வைத்திய நிபுணரால் இன்றுமுதல் நாளைமறுதினம் வரை சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

ஐக்கிய இராட்சியத்திலிருந்து வருகை தந்துள்ள தோல்நோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி, ரவீந்திரன் அவர்களினால் தோல் நோய் தொடர்பான சிகிச்சைகளும், ஆலோசனைகளும் கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்தமருத்துவ மனையில் நடைபெறவுள்ளது.

இன்றும், நாளையும் காலை 8.00மணிமுதல் பிற்பகல்3.00 மணிவரையும் நாளை மறுதினம் காலை 8.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரையும் தோல் நோய் சம்பந்தமான சிகிச்சைகள் வழங்கப்பெறவுள்ளதனால் பயன் பெற விரும்புபவர்கள் குறிப்பிடப்பட்ட தினங்களில் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளும் வண்ணம் டாக்டர். பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைப் பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

# வீதி ஒழுங்கு விதிமுறைகள் பற்றி சாரதிகள் நடத்துநர்களுக்கு கருத்தூட்டல்

(கிளிநொச்சி)

யாழ்.மாவட்டத்திலிருந்து வன்னிப் பகுதிக்கு மண் ஏற்றுவதற்கு வந்த பாரவூர்திச்சாரதிகள், நடத்து நர்களுக்கான வீதி ஒழுங்கு விதி முறைகள் தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு நேற்றுப் பரந்தனில் அமைந்துள்ள மண் ஏற்றுவதற்கு அனுமதி கொடுக்கும் செயலகத்தில் சிவனேசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சிவகுமாரன் அவர்கள் வீதி ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பாகவும் சைகைகள்,சாரத்தியத்தின் வகைகள் தொடர்பாவும் விபத்துக்கள் நிகழாது சாரத்தியம் செய்தல் வேண்டும் எனவும் கருத்துக்களை வழங்கினார்.

இக்கருத்தூட்டல் நிகழ்வு காலை 8.00 மணிக்கு ஆம்பமாகி 9.45 மணிக்கு முடிவுற்றது. இதில் 120 பாரவூர்திச் சாரதிகளும்,120 நடத்துநர்களும் கலந்து கொண்டனர்.

# கிளி. மாவட்ட வைத்திய சாலையில் நாளை மன நோயாளருக்கான சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் மனநோயாளர்களுக்கான சிகிச்சைகள் நாளை நடைபெறவுள்ளது.

உளவளத்துறை பேராசிரியர் டாக்டர், தயா சோமசுந்தரம் அவர்களால் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை மேற்படி சிகிச்சைகள் இடம் பெறவுள்ளதால் உளவளர்ச்சி சிகிச்சை பெறவிரும்புவோர் நாளைய தினம் மாவட்ட வைத்திய சாலைக்கு சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளதுடன்.நாளைய தினம் மாவட்ட வைத்திய சாலையில் மார்புச் சிகிச்சையும் இடம் பெறவுள்ளதென மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (சோ)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.ச.பொ.அபிவிருத்தி நிறுவனம் உதவி

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் சுனாமி பேரலையால் பாதிப்புற்ற மட்டக்களப்பில் பெரியகல்லாறு, களுவாஞ்சிக்குடியிலும் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிலிலும் மக்களுக்கு நிதி உதவியும்,அத்தியாவசியப் பொருட்களும் வழங்கியுள்ளது. அத்துடன் பருத்தித்துறை கற்கோவள மக்கள் இடம் பெயர்ந்து வாழும் நலம்புரி நிலையமான கற்கோவளம் மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலுள்ள 174 குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள், பாய்,உடுப்புகள் வழங்கியுள்ளது.

# பழுதடைந்த யமாக வெளிஇணைப்பு இயந்திரங்களை திருத்த யமாக கம்பனியினர் வடமராட்சி கிழக்கில்

(வடமராட்சி கிழக்கு)

சுனாமி கடற்பேரலையின் போது வடமராட்சி கிழக்கில் சேதமடைந்த வெளியிணைப்பு இயந்திரம் (அவுட்மோட்டர்) யமாக இயந்திரங்களை திருத்தித்தருவதற்கு யமாக இஞ்சின்களை வழங்கிய யமாக பிளாஷா நிறுவனத்தினர் நேற்றுத் தொடக்கம் இரண்டுகிழமைகளுக்கு வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் சமாசத்தில் தங்கியுள்ளனர். இஞ்சின்களை யமாக பிளாஷா நிறுவனமூடாக எடுத்தவர்கள் உடனடியாக வந்து திருத்தும்படி கேட்டுள்ளார் யமாக பிளாஷா உரிமையாளரான இந்திரகுமார். (11)


# சாவு அறிவித்தல்

## அமரர். இராஜேந்திரம் பாலசிங்கம்

இராஜேந்திரகுளம்,வவுனியா என்னும் முகவரியில் வசித்த வருமான தற்பொழுது கனகபுரம்,அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்தவருமான மாவீரர் வீரவேங்கை வைத்தி அவர்களின் தந்தையராகிய இராஜேந்திரம் பாலசிங்கம் அவர்கள் 17.01.2005ஆம் திகதி திங்கட்கிழமை சாவடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் நடைபெற்று 18.01.2005 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு கனகபுரம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், போராளிகள், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப் படுகின்றீர்கள்.

**தகவல்:-**
**இயக்குநர்,**
**அன்புச்சோலை மூதாளர் பேணலகம்,**
**கனகபுரம்,கிளிநொச்சி.**

(சி.11208)

# பாக்,அணுகுண்டு போடலாம் சி.ஐ.ஏ நிபுணர் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

**எதிர் காலத்தில் இந்தியாவின் பலம் வாய்ந்த ராணுவத்தைச் சமாளித்து வெற்றி காண பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ. நிபுணர் அச்சம் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க தேசிய உளவுத் துறை கவுன்சில் 'சர்வதேச நாடுகளின் எதிர்காலம் பற்றிய வரைபு' என்ற தலைப்பில் அறிக்கையொன்றைத் தயார் செய்துள்ளது. மொத்தம் 114 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில் சி.ஐ.ஏ. உளவுப் பிரிவு நிபுணர் கூறியிருப்பதாவது;

இந்தியா-பாக் இடையே மோதல் ஏற்பட்டால் இரண்டு நாடுகளுமே அதற்கான விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கும். இந்தியாவின் மிகப் பெரிய இராணுவப் பலத்தை எதிர்த்து வெற்றிக் கொள்ளும் அளவுக்குப் பாகிஸ்தானிடம் படைபலம் இல்லை. மேலும், போர் திறன் விசயத்தில் இஸ்லாமபாத்திடம் ஆழமான திறன் இல்லை. அந்தச் சூழ்நிலையில் இந்தியாவை வெற்றிகொள்ள அணு ஆயுதங்களை பாகிஸ்தான் பிரயோகிக்கக் கூடும். நீண்ட தூரம் சென்று தாக்கும் திறன் படைத்த ரொக்கெட்டுக்கள் ஏவுகணைகளின் கண்டு பிடிப்புக்களால் இராணுவத்திடம் உள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலை வரலாம். இவ் இருநாடுகள் மோதினால் அதன் பின் விளைவு பயங்கரமாக இருக்கும் என்பது நிச்சயம். இந்தச் சூழ்நிலையில் காஷ்மீர்,பலஸ்தீனம், தய்வான் போன்ற இடங்களில் உள்ள பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண தொடர்ந்து அமெரிக்கா பாடுபடும் இவ்வாறு சி.ஐ.ஏ. கூறியுள்ளது.



அபுகிறைப் சிறைச்சாலையில் ஈராக் பொதுமக்களை படுகொலை செய்தமை, அவர்களை பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கியமை போன்ற குற்றச்சாட்டுக்கள் நீரூபிக்கப்பட்ட நிலையில் இராணுவ நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்ட இராணுவ அதிகாரி சாள்ஸ் கிறனர் கைவிலங்கு பூட்டப்பட்டு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்படுகிறார்.

# 'எப்-16' ரக போர் விமானங்களை அமெரிக்கா பாக் இற்கு வழங்கும்?

அமெரிக்கா-பாகிஸ்தான் இடையேயான பாதுகாப்பு ஆய்வுக்குழுக் கூட்டம் அடுத்த வாரம் நடக்க இருக்கிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு,' எப்-16' ரக போர் விமானங்களை அமெரிக்கா விற்க வேண்டும் என்று பாகிஸ்தான் வற்புறுத்தும்., இப்போது உள்ள போர்விமானங்களை நவீனப்படுத்தவும், பழுதுபார்க்கவும் அமெரிக்காவின் உதவியை பாகிஸ்தான் கேட்க இருக்கிறது. 'நேட்டோ'அமைப்பில் இடம் பெறாவிட்டாலும், பாகிஸ்தானை தனது நட்பு நாடாக அமெரிக்கா கருதுகிறது. எனவே பாகிஸ்தானின் இந்த கோரிக்கைகளை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் இந்த 'எப்-16' விமானங்களில் அணு ஆயுதங்களையும் ஏற்றிச்செல்ல முடியும்.



பலஸ்தீனத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடும் இஸ்ரேல் இராணுவத்தினரின் ட்ரக்வண்டியொன்றுக்கு பாதையை சீர் அமைத்துக் கொடுக்கும் ஆயுதந்தாங்கிய புல் டோசர்.

# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் எட்டு பலஸ்தீனியர்கள் பலி

(ரமல்லா)

இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் எட்டு பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். பலஸ்தீன புதிய அதிபராக முகமது அப்பாஸ் பதவியேற்றுள்ள சூழ்நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

பலஸ்தீனத்தின் புதிய அதிபராக முகமது அப்பாஸ் கடந்த சனிக்கிழமை பதவியேற்றார் பதவியேற்றபின் அவர் பேசுகையில்; இஸ்ரேலுடன் அமைதியை ஏற்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்வோம் இப்பகுதியில் தீவிரவாத சூழ்நிலை மறைவதற்கு இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்றும் கூறியிருந்தார். ஆனால் இவரது பேச்சுக்கு எந்த விதத்திலும் பலன் இருக்காது என்பதை நிரூபிக்கும் வகையில் தற்போது சம்பவங்கள் நடைபெறுகின்றன. மத்திய காஸா பகுதியில் நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் மூன்று தீவிரவாதிகள் உட்பட ஆறு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். தெற்கு காசா பகுதியில் ராபா என்ற இடத்தில் நடந்த மற்றொரு தாக்குதலில் மேலும் இரு பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பேசிய அந்நாட்டுப் பிரதமர் ஏரியல் ஷரோன் பலஸ்தீனத்தில் தலைமை மாறியுள்ளதைத் தவிர எந்த முன்னேற்றமும்இல்லை. தீவிரவாதிகளுக்கு ஏதிரான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை எனவே தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க இஸ்ரேல் இராணுவம் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி சுதந்திரமாகச் செயற்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்றார்.

# பாதுகாவலன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பிலிப்பைன்ஸில் அதிகாரி உட்பட 8 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் கிறிஸ்தவ மக்களின் திருவிழாவின் போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயர் பொலிஸ் அதிகாரி உட்பட ஆறு பொலிசாரும் இரு பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள அக்லான் மாகாணத்தை சேர்ந்தது காலிஹோ நகரம் ரோமன் கத்தோலிக்க பிரிவைச் சேர்ந்த சாந்தோநினோ என்பவரை நினைவில் கொள்ளும் பொருட்டு ஆண்டு தோறும் இப்பகுதி மக்கள் பெரிய விழா ஒன்றை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் இந்தத் திருவிழா வழக்கம் போல் தொடங்கியது அப்போது நடந்த விபரீத சம்பவம் குறித்து தேசிய தலைமை பொலிஸ் அதிகாரி எட்கார்கோஅக்லிபெரிகூறிய தாவது; அக்லான் மாகாண தலைமை பொலிஸ் அதிகாரி நேற்று முன்தினம்காலை சிறப்புப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட பிறகு அருகிலுள்ள ஒரு அரச கட்டடத்தை நோக்கி நடந்து சென்றார். அவருடன் நூற்றுக் கணக்கானவர்கள் சென்றுகொண்டிருந்தனர் அப்போது அவரின் பாதுகாவலர் ஒருவர் அவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கியா[illegible]ட்டார் இதில் பொலிஸ் அதி[illegible]டன் ஐந்து பொலிசார் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதோடு, 35 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். பின்னர் துப்பாக் கிச் சூடு நடத்திய பொலிசாரையும் பாதுகாப்புப் பணியிலிருந்த ஏனைய பொலிசார் சுட்டுக் கொன்றனர். அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு நடத்திய அவரது பாதுகாவலர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று தெரிவிக்கப் படுகிறது.இச்சம்பவம் குறித்துப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



பாங்கொங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயணிகள் ரயில் விபத்தில் காயப்பட்ட ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துக் செல்லப் படுகிறார்.



நேபாளத்தின் தலைநகர் காத் மண்டுவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் பொலிசார்.

# தீவிரவாதிகள் நடத்திய இருவேறு தாக்குதல்களில் ஈராக்தேசிய இராணுவம் உட்பட 18 பேர் பலி

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கு வடக்கேயும் கிழக்கேயும் அமைந்துள்ள பிரதேசங்களில் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு தாக்குதல்களில் ஈராக்கிய தேசிய இராணுவத்தினர் உட்பட 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வையி என்ற நகரில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்தை ஊடுருவிய தீவிரவாதிகள் காரில் பொருத்தப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் ஈராக்கிய பொலிசார் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை தலைநகருக்கு வடகிழக்கே பக்கோபா என்ற நகரில் அமைந்துள்ள சோதனைச்சாவடி மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதன்போது ஈராக்கிய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த 8பேர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலைதாமே மேற்கொண்டதாக அபுமுஷாக் அல்சர்காவின் ஆதரவாளர்கள்தெரிவித்துள்ளனர்.

# சுனாமி தடுப்பு மாநாட்டில் நாலாயிரம் பிரதிநிதிகள் கலப்பர்


பூகம்பம், எரிமலை வெடிப்பு, சுனாமி பேரலைகள், பலத்த மழை, நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றத்தால் ஆண்டுதோறும் 20 கோடி பேர் உயிரிழக்கிறார்கள்.

சுனாமி போன்ற இயற்கை சீற்றத்தை முன் கூட்டியே கண்டறிந்து உயிர்ப் பலியை தடுப்பது எப்படி என்பது குறித்து ஆலோசிக்கவும், நவீன கருவிகளை உருவாக்குவது குறித்து ஒத்துழைப்பு கொடுப்பது பற்றிய ஆராய்வும் 140 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு ஜப்பானின் கோபே நகரில் 21 ஆம் திகதி நடக்கிறது 4,000 பிரதிநிதிகள் ஐ.நா சார்பில் நடக்கும் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள்.

# 18,780 மாவீரர்களின் கனவுகளை நனவாக்க வேண்டியது

# ஒவ்வொரு தமிழனினதும் தலையாய கடமையாகும்

## 10 வேங்கைகள் நினைவு நிகழ்வில் பொன்.தியாகம்



(அலுவலகசெய்தியாளர்)

**"ஒவ்வொரு மாவீரரும் தமிழீழத்தின் விடிவிற்காக தங்கள் இன்னுயிரை ஈர்ந்துள்ளனர். இந்த 18,780 மாவீரர்களின் கனவுகளை நனவாக்க வேண்டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்". இவ்வாறு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பிரதேச சபை செயலக வளாகத்தில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணி மனைப்பொறுப்பாளர் பொன். தியாகம் கலந்துகொண்டு நினைவுரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; எமது மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் எமது தேசியத் தலைவர் காலத்தில் இதனை நாங்கள் பெறவேண்டும் நாங்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமெனில் தமிழீழம அமைய வேண்டும். இந்தக் கனவுடன், குறித்த இலட்சியத்துடன் 18,780 மாவீரர்களும் ஆகுதியாகியுள்ளனர். இந்த மாவீரர்களின் சிந்தனைகள் உந்து சக்தியாக எமது மக்களின் மனங்களில் புரையோடியுள்ளது. இதனை எந்த சக்தியாலும் மாற்ற முடியாது. எனவே இந்த மாவீரர்களின் கனவுகளை நனவாக்க எமது தேசியத் தலைவரின் கரங்களைப் பலப்படுத்த ஒவ்வொருவரும் இந்நாளில் திட சங்கற்பம் கொள்வோம். நம்புங்கள் தமிழீழம் நாளை விடியும் என்றார்.

(சோ)

## சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு உணவு ,மருந்துப் பொருட்கள் வழங்கல்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு,மருந்துப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டன. அண்மையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இலங்கை கிறீன் மூமென்ட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் பொருண்மிய மதியுரையக பிரான்ஸ் கிளை நிதியுதவியுடன் இரு பத்தைந்து இலட்சம் ரூபா பெறுமதி யான உணவு, மருந்து ஆகியவற்றை பொருண்மிய மதியுரையகம் வழங்கியுள்ளது. (05)

## பெற்றோருடன் கல்வி குறித்து விழிப்புணர்வு கலந்துரையாடல்

Fit நிறுவன நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தால் முள்ளியவளை கிழக்கு கிராம அலுவலகர் பிரிவில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கு அண்மையில் கல்வி தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம் பெற்றது. முள்ளியவளை கிழக்கு சிக்கன கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன உதவித் திட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமான இக் கருத்தரங்களில் விரிவுரையாளராக தொலைக்கல்வி ஆசிரியர் சி.சுந்தரலிங்கமும் திட்ட இணைப்பாளர் செல்வி. ம.சுகந்தாவும் விரிவுரைகளை வழங்கினர்.

## மட்டக்களப்பு கல்லடியில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு கல்முனை வீதி கல்லடியில் 35 வயது குடும்பஸ்தரொருவர் கடந்த சனிக்கிழமை இரவு இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் பாரதிலேனில் வசிக்கும் பொன்னுத்தம்பி சகாயராஜ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். தனியார் காப் புறுதி நிறுவனமொன்றில் பணியாற்றும் இவர், தனது நண்பரொருவரைச் சந்தித்து விட்டு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்களைத் திரட்ட நடவடிக்கை

சுனாமிப் பேரலையினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள அனைத்து மாணவர்களுக்கான 2005ஆம் ஆண்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் அனர்த்தத்திற்குட்பட்டு கல்வியைத் தொடர்வதில் பல்வேறு வழிகளிலும் இன்னல் பட்டிருக்கின்ற மாணவர்களின் விபரங்களை முழுமையாகப் பெறும் நோக்கோடு அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் தரவுகள் திரட்டப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களையும் இன்று 18ஆம் நாள் காலை 10.00 மணியிலிருந்து 2.00 மணி வரையான காலத்தில் மு/ முல்லைத்தீவு ம.வி. மு/வித்தியானந்தாக் கல்லூரி, மு/ செம்மலை ம.வி மு/சிலாவத்தை அ.த.க பள்ளி, மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மாணவர்கள் யா/செம்பியன்பற்று அ.த.க பள்ளி, யா/உடுத் துறை ம.வி, யா/ மருதங்கேணி அ.த.க பள்ளி, யாஆழிய வளை ம.வி, யா/ வெற்றிலைக்கேணி அ.த.க பள்ளிகளிலும் வடமராட்சி வலயப் பள்ளிகள் யா.புலோலி மெதடிஸ்மிசன் பள்ளியிலும், யா/ வட இந்து மகளிர் கல்லூரியிலும், யா/வல்வை சிவகுரு ம.வியிலும் ஏனைய பள்ளிகளின் முதல்வர்களிடமும் பெயர்களைப் பதிவு செய்து உறுதிப் படுத்திக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர். இந்தப் பணிகள் நேற்று ஆரம்ப மானமை குறிப்பிடத்தக்கது.

## கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் நினைவு நாள் படையணிப் போராளிகளால் உணர்வெழுச்சியுடன் நினைவு கூரல்





(அலுவலக செய்தியாளர்)

வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு, லெப். கேணல் குட்டிசிறி உட்பட 10 வேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கேணல் கிட்டு பீரங்கி படையணியின் லெப். கேணல் குட்டிச்சிறி மோட்டார் படையணிப் போராளிகளால் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

-நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கடற்புலிகளின் மகளிர் தளபதிகளில் ஒருவரான கெங்கா, லெப். கேணல் குட்டிச்சிறி மோட்டார் படையணியின் மகளிர் தளபதி பவநிதி ஆகியோர் ஏற்றினர். அடுத்து திருவுருவப் படத்திற்கான மலர்மாலையினை நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன், துணைப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து 10 வேங்கைகள் தொடர்பான நினைவுரையினை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார். கள முனை கருத்துரைகளை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் யாழினி வழங்கினார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினரின் தியாகசீலம் இசைக் குழுவினரின் இன்னிசை கானங்களுடன் எழுச்சி நிகழ்வு சிறப்புற நிறைவு பெற்றது. (கு)

## சுனாமியால் முல்லையில் இடம்பெயர்ந்து

# நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கும் பணி தீவிரம்



(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அலைத் தாக்கத்தினால் அழிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சுனாமியால் முற்றான அழிவை சந்தித்த 13 கிராமங்களின் மக்களும் தற்போது பாடசாலைகள், பொது நோக்கு மண்டபங்கள் எனப் பல நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைப்பதற்கான இடங்கள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவ்விடங்களைச் சீர்படுத்தும் செயற்பாடுகளும், சீர் செய்த இடங்களில் கொட்டகைகளை அமைக்கும் செயற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் படி முல்லைத்தீவு கள்ளப்பாடு கிராமத்தைச் சேர்ந்த 360 குடும்பங்களை குடியமர்த்துவதற்காக உண்ணாப்புலவு பகுதியில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன செயலணிக்குழுவினரின் திட்டமிடலின் படி அமைக்கப்பட்டு வரும் இக் கொட்டகைகளில் குடியமர்த்தப்படும் மக்களின் அத்தியாவசிய



செயற்பாடுகளையும் ஒழுங்கமைக்கும் முகமாக கழிப்பறைகள், குளியல் அறைகள் என்பனவும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டு வரும் இதே வேளை ஒவ்வொரு கொட்டகைக்கும் மின் விளக்குகளைப் பொருத்தும் பணியும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. அத்தோடு பொது நோக்கு மண்டபம் முன்பள்ளி என்பனவும் அமைக்கப்பட்டு வருகின்றன. இக் கொட்டகைகளை அமைப்பதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ள நிலையில் உண்ணாப்புலவு தவிர்ந்த ஏனைய இடங்களில் கொட்டகைகள் அமைப்பதற்கான செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையிலேயே காணப்படும் இதே வேளை வட்டுவாகல் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட இடங்களை துப்பரவு செய்யும் பணியில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே மேற்படி செயற்பாடுகளை பொறுப்பேற்ற நிறுவனங்கள் தாமதமின்றி செயற்பாடுகளை மேற்கொண்டு பாடசாலைகளிலிருந்து மக்களை அகற்றி பாடசாலைகள் இயங்க வழி சமைக்கவேண்டுமென அப்பகுதி செயலணிக்குழுவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச)

# முல்லை நகரை மீளமைத்து மக்களுக்கு புனர்வாழ்வளிக்க யூ.என்.டி.பி , ஐ.நா.சபை உதவ வேண்டும்

## தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை கோரிக்கை

சுனாமி பேரலையால் முல்லைத்தீவு நகரில் அனைத்தும் அழிவுற்றுள்ளன. இவற்றை மீளமைத்து மக்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கப்படவேண்டியுள்ளது. இவற்றுக்கான வளங்கள் சிறிலங்கா அரசினால் அனுப்பி வைக்கப்படவில்லை. இதற்கான யூ.என்.டி.பி. அமைப்பு மானிதாபிமான முறையில் உதவிகளைச் செய்து தரவேண்டும் என தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தம்மைச் சந்தித்த யூ.என்.டி.பி. மற்றும் ஐ.நா. பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தினால் நிகழ்ந்த அழிவுகளையும் சேதங்களையும் பார்வையிட்டு மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக யூ.என்.டி.பி. நிறுவன அதிகாரிகள் முல்லை நகருக்கு விஜயம் செய்திருந்தனர். இதன் போது இங்கே ஏற்பட்ட அழிவுகளையும் சேதவிபரங்களையும் தமிழீழ கடற்படைத் தளபதி கேணல் சூசை அவர்கள் யூ.என்.டி.பி அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறிய போதே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்திருந்தார்.

சேதங்கள் குறித்து அவர்களுக்கு கேணல் சூசை விளக்கிய போது கூறுகையில், முல்லைத்தீவுப் பகுதியிலே மட்டும் சுனாமி பேரலைகளின் தாக்கத்தினால் கிட்டத்தட்ட 3300 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்தும் காணாமலும் போயுள்ளார்கள் அழிவுகளில் இருந்து மீட்கப்பட்டவர்களுக்கு இடம் பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி மனிதாபிமான உதவிகள் ஓரளவு வந்து சேர்ந்ததாலும் அது உடனடித் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுடையதாக இருக்கவில்லை. அதாவது உணவுப் பொருட்களின் தேவைகள் குறித்து அதிகாரிகள் வினாவிய போது உணவுத் தேவை போதுமானதாக வந்து சேர்ந்தது. எனினும் இம் மக்கள் தங்கி இருப்பதற்கான தற்காலிக கூடாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. மலசல கூட வசதிகள் பூரணமாக செய்து கொடுக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 2000 கூடாரங்கள் தேவையாகவுள்ள நேரத்தில் இது வரை 175 கூடாரங்கள் மட்டுமே வந்து சேர்ந்துள்ளன. டென்மார்க் அரசினூடாக இக் கூடாரங்கள் தருவிக்கப்படுகின்றன. அத்துடன் மீட்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் என்பனவும் போதுமான அளவு இல்லை. முல்லை மாவட்ட செயலகத்தினூடாக இது வரை ஆக இரண்டு பிக்கப் வாகனங்களும் இரண்டு பேருந்துகளும் மாத்திரமே தந்துள்ளார்கள். அதே வேளை மீட்புப் பணிக்கான நிதியுதவியாக முதல் வாரம் 25 இலட்சம் ரூபாவும் பிந்திய ஒருவாரத்தில் 25 இலட்சம் ரூபாவும் மட்டுமே வழங்கியுள்ளார்கள். இதனை வைத்துக் கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் தாக்குப் பிடிக்க முடியும். இதற்காக எமது அமைப்பினரின் கனரக வாகனங்களும் கலோரஸ் அமைப்பின் வாகனங்களுமே மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டிய தேவையிருக்கின்றன. கடற்கரையில் இருந்து சுமார் 400 மீற்றருக்கப்பால் இக்குடியிருப்புக்களை அமைத்துத்தருமாறு மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதற்கேற்றபடியே சகலவேலைகளையும் செய்யவுள்ளோம். இக்கடற்பகுதிகள் கற்பாறைகளைக் கொண்டிராததால் கடல் அலைகள் வேகமாக வந்து எதுவித தடங்கல்களும் இல்லாமல் மக்கள் குடியிருப்புக்களை அள்ளிச் சென்றிருக்கிறது. எனவே இதனைத் தடுப்பதற்கு கடற்கரையிலே இருந்து 250 மீற்றர் தூரத்திலே ஒரு தடுப்புச்சுவர் ஒன்று எழுப்பப்படவேண்டும். இங்கே இறந்தவர்களில் முல்லை வண்ணாங்குளக் கிராமம் என்ற கிராமத்திலே தான் 400மீற்றர் அகலத்தைக் கொண்ட பகுதியிலே மட்டும் 1400 பேர் வரையில் இறந்து இருந்தார்கள். இந்தப் பகுதியை அடக்கி ஆறு கிலோமீற்றர் வரையான பகுதிக்கு இந்தத் தடுப்புச்சுவர் மிகக்கட்டாயமாக எழுப்பப்படவேண்டும் என கூறிய அவர்.

அடுத்த படியாக இந்த மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த இம்மக்களுக்கான தொழில் முயற்சியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவைபற்றியும் சூசையவர்கள் ஐ.நா.அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறினார். அதாவது முல்லைத்தீவுப் பகுதியின் மீன்பிடிக்கப்படுகின்ற அளவு அண்மைய ஆண்டுகளாக அதிகரித்துக் கொண்டேவந்து கொண்டிருந்தது. 1976 இல் 4621 தொன், 1980இல் 10.000 தொன், 1981 இல் 8150 தொன், 1982 இல் போர்க்கால நிலைமையிலும் 6160 தொன் என அதிகரித்துச் சென்ற புள்ளி விபரங்களையே காட்டுகின்றது. 1983 காலப்பகுதியில் இங்கே ஒரு மீன்பிடித்துறை முகம் இருந்ததையும். 28 அடி நீளமான இழுவைப்படகுகள் வைத்திருந்து இப்பகுதி மீனவர்கள் தொழில்களிலே ஈடுபட்டதையும் நினைவுபடுத்திக் கூறிய அவர் தொழில் செய்வதற்கான ஏது நிலைகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய தேவை குறித்தும் அதிகாரிகளுக்கு வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அத்துடன் இப் பிராந்தியத்திற்கான வலை உற்பத்தி ஆலையை நிறுவுதல் மற்றும் இயந்திரங்களை மீனவர்களுக்கு வழங்குதல், திருத்தும் நிலையங்களை அமைத்தல், ஐஸ்தொழிற்சாலையை அமைத்தலும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகள் பதனிடும் வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவைகளையும் எடுத்துக் கூறினார். வெளிச்ச வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் மீன்பிடி இறங்கு துறைகளை அமைக்கவும் குறைந்தது இரண்டு ஐஸ்கட்டி உற்பத்தி ஆலைகளை யாராவது அமைத்துத் தரும்படியாக மீனவர் சங்கம் தம்மிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் கூறினர்.

தற்போது மக்கள் எல்லாவற்றையும் இழந்துள்ளதால் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்துக்கு யூ.என்.டீ.பி யினால் வழங்கப்பட்ட கடனை அறவிட வேண்டாம் என்று சமாசத்தினர் கேட்டுக் கொண்டுள் ளனர். இந்த சமாசத்தைக் கட்டியெ ழுப்பவும் சமாசத்தினால் பதிவு செய்யப்பட்ட எம்.எம்.எஸ் கொம் பனி ஒன்று இயங்கியது. இது படகினை உற்பத்தி செய்த தொழிலகம் அதனையும் இயங்க வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த யூ.என்.டி.பி பிரதிநிதி தாங்கள் இவற்றுக்கான சகல வசதிகளையும் செய்து தருவதாகவும் கடன் பணத்தினை திரும்ப அறவிட மாட்டோம். எனவும் கூறியதோடு போன வருடத்தில் தாங்கள் செய்த உதவியினை விட இம் முறை கூடுதலாகச் செய்ததாகவும் வாக்குறுதியளித்ததோடு படகு கட்டுமானப் பணிகளையும் சென்று பார்வையிட்டு தற்போது தற்காலிக படகுகளை உடனே வழங்கி முல்லைத்தீவு மக்களுக்கு உதவுவோம் எனவும் வாக்குறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்பிலே ஐ.நா அமைப்பின் விசேட தூதுவர் மாக்கிறட்டா வோல்ட்சும், ஐ.நா அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மேஜர் றோமியோ ஆகியோருடன் யூ.என்.டி.பி.யின் துறை சார் பிரதிநிதிகள் போரூட் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டுக் சென்றனர். (20)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்.மாவட்ட சிற்றூர்தி சங்க[illegible]ண உதவி

(நல்லூர்)

யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தினர் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்களுக்கு நிதி உதவியை வழங்கி வருகிறார்கள்.

முதற் கட்டமாக வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி தொண்டமனாறு இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்களுக்கு இவ்உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இடைத்தங்கல் முகாம்களுக்கு சென்ற யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவை சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் மற்றும் இணை சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களும் கூடச் சென்று இப் பணக் கொடுப்பனவை வழங்கியுள்ளனர்.

கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் இவ் நிதி உதவிக் கொடுப்பனவுகள் இரண்டாயிரம் ரூபா யாழ். மாவட்டத்தில் கடல் அனர்த்தம் காரணமாக குடும்ப உறுப்பினர்களை இழந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

## 45 இலட்சம் ரூபா செலவில் அலுவலகம்

நீர்ப் திட்டத்தின் உதவியுடன் ரூ.45 இலட்சம் செலவில் சாவகச்சேரியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சி சுகாதார வைத்திய அதிகாரிக்கான இவ் அலுவலகத்தின் கட்டுமானப் பணிகள் எண்பது சதவீதம் முடிவடைந்து விட்டது என்றும் அடுத்த மாத அளவில் இவ் அலு வலகம் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## கடல் அனர்த்தத்தால் பாதிப்புற்றோருக்கு இலவச சட்ட ஆலோசனை

(வடமராட்சி)

சுனாமி கடலனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த பிள்ளைகளை உறவினர்கள் தத்தெடுப்பது தொடர்பாக அரசின் புதிய சட்டங்களுக்கு அமைவாக ஆலோசனைகள் வழங்க பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் முன்வந்துள்ளது.

இப் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு ஆவணங்களை இழந்த மக்களுக்கு தேவையான இலவச சட்ட ஆலோசனைகளையும் இச் சங்கம் வழங்கும்.

தேசிய அடையாள அட்டை காணி உறுதிகள், கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ்கள் மரண அத்தாட்சிப் பத்திரங்கள் போன்றவற்றை இழந்தவர்கள் அவற்றை மீளப் பெறுவது அல்லது அவற்றிற்கான மாற்று நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாகவும், இச்சங்கம் ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

(45)

## கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் விசேட கூட்டம் வரும் 22.01.2005 சாவகச்சேரி றிபோக் கல்லூரியில் சங்கத் தலைவர் மருத்துவர் அருளானந்தம் தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். (28)

## சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த ஆண்டு ஒரு இலட்சம் பேர் சிகிச்சை

(தென்மராட்சி)

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரை பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெற்று சென்றுள்ளவர்கள் குறித்து புள்ளி விபரங்களை மருத்துவமனை வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

இம்மருத்துவமனையில் கடந்த ஆண்டு மட்டும் ஒரு இலட்சத்து எட்டாயிரம் பேர் வெளிநோயாளர்க்காக பதிவு செய்யப்பட்டு சிகிச்சை பெற்று சென்றுள்ளார்கள், என்றும் ஆறாயிரத்து நானூற்று எண்பத்தாறு பேர் உள்ளே நோயாளர்களாக பதிவு செய்யப்பட்டு தங்கி சிகிச்சை பெற்று சென்றுள்ளார்கள் என்றும் முன்னூற்றி இருபத்தியொன்பது குழந்தைகள் பிறந்துள்ளது என்றும் இறப்பு வீதம் இரண்டு மட்டும் என்றும் கடந்த ஆண்டு நாய்க் கடிக்கு இலக்கானோர் மட்டும் இப்பிரதேசத்தில் ஐநூற்றி எழுபத்தியொன்பது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## 2800 மாணவர்க்கு கற்றல் உபகரணம்

யுனிசெவ் நிறுவனம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் ஊபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் முதல் கட்டமாக 2800 மாணவர்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சாவகச்சேரி மருத்துவமனையின் தேவை குறித்து கனடா பா.உறுப்பினர் ஆராய்வு

(தென்மராட்சி)

சாவகச்சேரி மருத்துவமனையை புனரமைப்பது சம்பந்தமாக கடந்த சனிக்கிழமை குடாநாட்டுக்கு விஜயம் செய்த கனடா நாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஜீம் ஆரியோன்ஸ் ஆராய்ந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை காலை எட்டு மணியளவில் சாவகச்சேரி மருத்துவமனையை பார்வையிட்டபின் மருத்துவ அதிகாரியிடம் தேவை குறித்து கேட்டறிந்ததுடன் உடைந்துள்ள மருத்துவமனை மீள் நிர்மாணம் செய்வது சம்பந்தமாய் சாதகமான பதில் அளித்துள்ளதாகவும், எதிர்காலத்தில் கனடா நாட்டு அரசு கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இப்பிரதேசங்களுக்கு உதவி செய்யும் என அவர் தெரிவித்ததாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## அல்லாரை சீலன் பூங்காப் பகுதியில் மூன்று எறிகணைகள் மீட்பு

(தென்மராட்சி)

கொடிகாமம் அல்லாரை சீலன் பூங்காப் பகுதியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணி ஒன்றை உழுதபொழுது நிலத்தினுள் புதைந்து கிடந்த மூன்று எறிகணைகள் மீட்கப்பட்டுள்ளன.

எறிகணைகள் தென்பட்டதும் அது குறித்து நில உரிமையாளர், வெடிபொருள் அகற்றும் நிறுவனத்திற்கு தகவல் கொடுத்ததையடுத்து அவ்வெடிபொருட்கள் மீட்கப்பட்டதாக தெரியவருகிறது. இவ்வெடிபொருட்கள் வெடிக்கும் நிலையில் இருந்ததாகத் தெரியவருகிறது.(28)

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

## மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டோரின் பார்வையில்...

'சுனாமி' பேரலைகள் பல்லாயிரம் உறவுகளின் உயிர்களையும், பெறுமதிமிக்க சொத்துக்களையும் சில நிமிடங்களில் விழுங்கி ஏப்பம் விட்டு நிற்கிறது. இந்தப் பேரவலம் பொதுவாகப் பல்வேறு நாடுகளிலும் இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கிறது. வன்னிப் பகுதியில் முல்லைத்தீவிலும் இது பேரிழப்பை ஏற்படுத்திவிட்டது. இதன் கோரத்தன்மையை யாராலும் கூறிவிட முடியாது.

இந்தநிலையில் பேரழிவுக்குள்ளான முல்லைத்தீவுப் பகுதியில் மீட்பு நடவடிக்கைகள் சில மணித்துளிகளுக்குள்ளாகவே ஆரம்பமாகிவிட்டது. இந்தத் துரித மீட்பு நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சகல படையணிகளும், தமிழீழக் காவல்துறையினரும், பொதுமக்களும் எனப் பலரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். துரிதகதியில் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டமைக்கு



பல தரப்பினரும் தமது பாராட்டைத் தெரிவித்திருந்தனர். எனவே மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை சந்தித்து அவர்கள் அந்தப் பகுதிகளில் எவ்வாறு செயற்பட்டார்கள். அவர்கள் எதைக் கண்டார்கள் அந்தப் பகுதிகள் எப்படிஇருந்தது என்பன பற்றிக்கேட்டோம். அவர்கள் எங்களுடன் பகிர்ந்துகொண்ட தமது அனுபவங்களை வாசகர்களுக்குத் தருகிறோம்.

தமிழீழக் காவல்துறையின் முல்லை. மாவட்ட கண்காணிப்பாளர் இ.ரஞ்சித்குமார் தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்கிறார்.

நாங்கள் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள எமது காவல்பணிமனையில் வழமையான கடமைகளை செய்துகொண்டிருந்தோம். காலை 9.00மணி இருக்கும் முல்லைத்தீவுப் பகுதியில் கடமையாற்றும் எங்கள் உறுப்பினர் ஒருவர் வேறு ஒருமுகாமில் இருந்து எங்களுக்கு தொடர் பெடுத்து இப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பதாகவும் அதனால் முல்லைத்தீவுக்குள் செல்ல முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்தார். நாங்கள் உடனடியாகவே ஒரு குறிப்பிட்ட உறுப்பினர்களுடன் அந்தப் பகுதிக்கு மீட்பு நடவடிக்கைகளுக்காக புறப்பட்டு விரைவாக வட்டுவாகல் பாலத்தை சென்றடைந்தோம். வட்டுவாகல் பாலத்தை நாங்கள் அடையும்போது மக்கள் பெரும் கூட்டம் கூட்டமாக புதுக்குடி யிருப்பை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

வட்டுவாகல் பாலத்தை நாங்கள் வந்தடைந்துவிட்டோம். பாலத்தின் மேலாக கடல்நீர் முல்லைத்தீவுக்குள் பாய்ந்து கொண்டிருந்தது.இதற்கிடையில் எங்களுடன் பிறிதொரு அணியும் வந்து இணைந்து கொண்டது. இப்பொழுது நாங்கள் வட்டுவாகல் பாலத்தைக் கடப்பதற்காக முயன்றுகொண்டிருந்தோம். பாலத்தில் பெரும் பனைமரங்கள் எல்லாம் வேருடன் வந்து சாய்ந்து கிடந்தன. நாங்கள் "மறு கரையை அடையவேண்டும் என்ற நோக்குடன் முயன்றுகொண்டிருந்தோம். மறு கரையில் இருந்து வரவேண்டாம்... என்று கை அசைத்துக்காட்டிக்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் பாலத்தின் நிலை என்ன என்பதை அறிவதற்காக நானும் குணராஜ் என்ற உறுப்பினரும் மெதுவாக நடந்துவந்துகொண்டிருந்தோம். அப்போது தான் தெரிந்தது இரண்டு இடங்களில் பாலம் உடைந்துள்ளது என்ற விடயம். பெரும் மரங்கள் பாலத்தில் வந்து தேங்கிக் கிடந்ததால் நாங்கள் அதை பயன்படுத்தி பாலத்தைக் கடந்து மறுகரையை அடைய முயற்சித்தோம். அப்போது மறுகரையில் இருந்தவர்கள் "அலைவருது அலைவருது" என்று கத்தியபடி ஓடிக்கொண்டிருந்தார்கள். நாங்களும் கடலைப் பார்த்தோம். கடல் உண்மையிலேயே மூசிக்கொண்டிருந்தது. இப்போது நாங்கள் தண்ணீருக்குள்ளால் ஓட ஆரம்பித்தோம். ஒருவாறு மறுகரையை போய்ச் சேர்ந்துவிட்டோம். நாங்கள் போய்ச் சேரவும் வெள்ளம் அதிகரிக்கவும் சரியாக இருந்தது.

வட்டுவாகல் பாலத்தின் மறுகரையில் கூடி நின்ற மக்களிடம் என்ன நடந்தது என்று கேட்டோம். அவர்கள் கதறி அழுதார்கள். "அலைவந்து கன பேரை அடித்துக்கொண்டு போய்விட்டது. காயப்பட்டும் செத்தும் கனபேர் கிடக்கினம். தூக்குறத்துக்கு ஒருத்தரும் இல்லை" என்றார்கள். முல்லைத்தீவில் என்னமாதிரி என்று கேட்டோம் அவர்கள் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றார்கள்.

வீதிகள், குடியிருப்புக்கள் எல்லாம் பெரும் வெள்ளம் தேங்கி நின்று கொண்டிருந்ததாலும் இடிபாடுகள், மரமுறிவுகள் அனைத்தும் இடத்தின் தோற்றத்தையே மாற்றி இருந்ததாலும் எங்களுக்கு எவ்வழியால் போவது என்று தெரியாமல் இருந்தது.

அருகில் நின்ற முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த நம்பி என்பவர் "எனக்குப் பாதை தெரியும் வாருங்கள் நான் கூட்டிக் கொண்டு போகிறேன்" என்று எங்களைப் பாதைகாட்டிக் கூட்டிச்சென்றார். அவருடன் சேர்ந்து நாங்கள் சின்னத்தங்காடு பக்கதால் உள்ளுக்கு இறங்கினோம். இறங்கியபிறகு தான் தெரிந்தது கோரமாய் பலர் செத்துக் கிடந்தரர்கள். தப்பியவர்கள் எங்களைக் கண்டதும் "ஐயோ எங்களைக் காப்பாறுங்கள்..." என்று கைகளைக் கூப்பி அழுதார்கள் நாங்கள் அவர்களிடம் எல்லோரையும் றோட்டுக்கரைக்கு கொண்டுவாருங்கள் நாங்கள் அதற்குரிய ஒழுங்குகளை செய்கிறோம் என்றோம். அத்துடன் உயிருடன் இருப்பவர்களை றோட்டுக்கு வாருங்கள் நாங்கள் உங்களையும் அனுப்புவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்றோம். வட்டுவாகல் பாலத்தின் அடுத்த கரையில் நின்றவர்களிடம் அறிவித்தோம். உடனடியாகவே எங்களுக்குரிய வாகனங்களை அனுப்புங்கள். காயமடைந்தவர்களும், இறந்தவர்களும் பெருமளவில் உள்ளனர் என்ற விடயத்தையும் தெரியப்படுத்தினோம்.

உடனடியாகவே உள்ளகப் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளர் கானகன் அண்ணா அவர்கள் உடைந்த பாலத்தை மண்போட்டும், கற்கள் போட்டும் திருத்தம் செய்து ஒரு உழவு இயந்திரத்தினை அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்தார். திடீர் என்று கடல் மூடியதால் அந்த முயற்சி தோல்வி கண்டுவிட்டது. அவர் உடனே எங்களுக்கு இந்தச் சம்பவத்தை அறிவித்து ஆட்களை வேறுபாதையால் மீட்குமாறு கூறினார். எங்களுக்கு வேறுவழி எதுவும் இல்லை. இந்த வழிதான் உள்ளது என்று தெரியப்படுத்தினோம். இந்தநிலை யில் சிறப்புப் படை உறுப்பினர் வசி என்பவர் தனது உயிரைப் பணயம்வைத்து வெள்ளத்துக்குள்ளால் உழவு இயந்திரத்தைக் கொண்டு வந்துவிட்டார். உடனடியாகவே காயமடைந்தவர்களையும், நீரில் மூழ்கி உயிருக்காகப் போராடிக்கொண்டி ருந்தவர்களையும் ஏற்றி அனுப்பிவிட்டு முல்லைத்தீவுக்குப் போக ஆரம்பித்தோம். இந்த நிலையில் சின்னத் தங்காட்டுக்கும், முல்லைத்தீவுக்கும் இடையில் உள்ள சிற்றாறு என்ற ஆறு பத்து அடியளவில் பாய்ந்தகொண்டிருந்தது. எதுவுமே தெரியவில்லை. நாங்கள் அதனால




போகின்ற முயற்சியைக் கைவிட்டு வேறு சுற்றுப் பாதையால் முல்லைத்தீவு பிரதான வீதிக்கு ஏறி இடுப்பளவு தண்ணீரில் நடந்து வந்து கரைச்சி குடியிருப்புப் பாலத்தை வந்து பார்த்தோம். அடுத்த கரையில் சிலர் அந்தரப்பட்டுக்கொண்டி ருந்தார்கள்.

நாங்கள் தண்ணீருக்குள்ளால் போய்க் கொண்டிருந்தோம். மரங்களின் மேல் ஆட்கள் நின்று எங்களை வரவேண்டாம். அநியாயமாய் சாகப் போறீங்கள் என்று ஏசினார்கள்.

பாலத்தை கடக்க வேண்டும் என்ன செய்வது என்று யோசித்தோம். அப்போது ஒரு உழவு இயந்திரத்துடன் நின்றவர் "தம்பி முல்லைத்தீவு போகப்போறன் வாறீங்களா?" என்று கேட்டார். அவருடன் கூடிப் போய்க் கொண்டிருந்தோம் உழவு இயந்திரத்தின் பெட்டியை மேவித் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. ஒருவாறு முல்லைத்தீவில் போய் இறங்கினோம். வட்டுவாகலில் இருந்து முல்லைத்தீவு போகவே நீண்ட நேரம் ஆகிவிட்டது.

முல்லைத்தீவின் நிலை மோசமாக இருந்தது. கரைச்சி குடியிருப்பில் கண்டதை விட முல்லைத்தீவு கோரமாக இருந்தது. எங்கும் மனித உடல்கள் உயிரற்றுக் கிடந்



தன. எங்கும் கட்டட சிதைவுகளும் முறிந்த மரங்களுமாக முல்லைத்தீவு காட்சி தந்தது.

நாங்கள் மீட்புப்பணியை ஆரம்பித்தோம். கரைதுறைப் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் உள்ள பெரிய மரத்தில் இருந்து "மாமா மாமா" என்று கூப்பிடுகின்ற சத்தம் கேட்டது. நாங்கள் மேலே பார்த்தோம். முட்கம்பிகள் சிக்கிய நிலையில் மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு பெண் குழந்தை மரத்தில் தொங்கிக் கொண்டு இருந்தது உடனடியாகவே அந்தக் குழந்தையை மரத்தில் இருந்து இறக்கினோம் இறங்கியதும் "தண்ணி தண்ணி" என்று கத்தியபடி மயங்கிவிட்டது அந்தக் குழந்தை. இந்தச் சம்பவம் மிகவும் வேதனையாக இருந்தது. உடனடியாகப் பிள்ளையை வைத்தி யசாலைக்கு ஏற்றி அனுப்பிவிட்டோம்.

இதன்பிறகு நாங்கள் தேடுதலை தொடர்ந்தோம். பல உடல்கள் மரங்களில் செருகுப்பட்டுக் கிடந்தன. பல ஆங்காங்கே நெளிந்தும், வளைந்தும் கிடந்தன சில கட்டட இடிபாடுகளுக்குள்ளே சிக்குண்டு கிடந்தன. "மீட்புப் பணிக்காக வந்திருக்கிறோம் யாராவது இருந்தால் வாருங்கள் என்று கத்தினோம்" எவரின் சத்தமும் இல்லை ஒருவர் பனைமரத்தின் மேல் ஏறி இருந்தார். அவரை இறங்கி வருமாறு சைகைகாட்டினோம் அவரோ "நான் இறங்கி வரமாட்டேன் முதலில் நீங்கள் மரத்துக்கடியில் வாருங்கள்" என்றார். நாங்கள் மரத்துக்கடியில் போனோம் அவர் உடனே இறங்கிவிட்டார் அவருடன் உரையாடினோம். அவருக்கு 40 வயது வரும் அவர் எதையும் பெரிதாக கதைக்கவில்லை மனத்தாக்கத்துக்குள்ளாகி இருக்கவேண்டும். அவரை உடனே ஏற்றி அனுப்பி விட்டோம் இவ்வேளையில் மீட்பு நடவடிக்கைகளுக்கு ஏனைய பிரிவுப் போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பெருமளவானவர்கள் வந்து குவிந்தார். [நாங்]கள் அவர்களுடன் சேர்ந்து மீட்பு நடவடிக்கைகளை வேகப்படுத்தினோம்.

எங்கள் மீட்பு நடவடிக்கையில் முதல் கட்டம் காயமடைந்தவர்களையும், உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களையும் மீட்பதாகத் தான் இருந்தது. பலரை மீட்டு அனுப்பினோம் காயமடைந்தவர்களில் சிலர்தாமாகவே வந்தார்கள். கால் கை முறிந்தவர்கள் கருக்குமட்டை வெட்டியவர்கள மரங்கள், கட்டடங்களுடன் அடிப்பட்டவர் கள் எனப் பலர்எழுந்து நடக்க முடியாமல் முணங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை தேடுதல் மூலம் கண்டு பிடித்தோம். சிலர் அவலக் குரல் எழுப்பினார்கள் இப்படியாக நாங்கள் மீட்பு நடவடிக்கைகளை செய்து கொண்டிருந்தோம். கட்டட இடிபாடுகளை அகற்றி தேடுதல் மேற்கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. 1.00 மணிவரை வெள்ளம் குறையவே இல்லை முழங்கால் அளவு வெள்ளத்தினால் தான் நாங்கள் மீட்பு நடவடிக்கைகளை செய்தோம் கைக்குழந்



தைகள். சிறுவர்கள் பெண்கள், வயோதிபர்கள் என வேறுபாடு இன்றி காண்கின்ற இடம் எல்லாம் சடலங்களாக இருந்தன. பலர் தமது குழந்தைகளை சடலமாக தூக்கி வைத்து கதறினர். சிலர் தங்கள் தாய் தந்தையை சடலமாக தூக்கி வைத்து கதறி அழுதனர் எங்குமே அவலக்குரலும் அழுகுரலும் காதை முட்டிமோதிக் கொண்டிருந்தது. சில சடலங்களை எங்களால் தூக்க முடியவில்லை. எலும்புகளின் மூட்டுக்கள் கழன்றிருக்கவேண்டும் அவற்றை பாய்களில் வைத்து இரண்டு பக்கமும் பிடித்துத் தூக்கி வந்தோம் முதல் நாள் மீட்பு நடவடிக்கையை பொறுத்தவரை பெரிதாக சடலங்கள் பழுதடையவில்லை. அடுத்தநாள் மீட்பு நடவடிக்கைதான் சிக்கலாக இருந்தது என அவா தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

**அ.லோகீசன்**

இந்த நிலையில் கண்காணிப்பாளர் ரஞ்சித்குமார் அவர்களின் தலைமையிலான மீட்பு அணியினரால் பனை மரத்தில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டதாக கூறப்பட்ட அந்த 40 வயது மதிக்கத்தக்க மனிதரை சந்தித்து கடலில் என்ன நடந்தது கடல் எப்படி வந்தது குடியிருப்புக்கள் எப்படி அடித்துச் செல்லப்பட்டது என அவர் மரத்தில் இருந்து நேரடியாக அவதானித்த விடயங்களை அறிவதற்காக முல்லைத்தீவில் உள்ள அனைத்து நலன் புரி நிலையங்களிலும் தேடி அலைந்து பெரும் சிரமங்களின் மத்தியில் அவரைச் சந்தித்தோம். அவர் நேரில் கண்ட தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார். அவர் எங்களுடன் பகிர்ந்தவற்றை வாசகர்களுக்காக தருகிறோம்


(தொடரும்)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்


## பின்பற்ற முன்வருவார்களா?


ஜெயசூரியா

கிரிக்கெட்டில் எந்த முன்னணி வீரர்களுக்கும் சரிவு ஏற்படுவது வழமையானது. இதில் எவருமே விதிவிலக்கல்ல.

குறிப்பாக நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் முதல் மேற்கிந் தியத்தீவின் லாறா , சிறி லங்காவின் ஜெயசூரியா, அவுஸ்திரே லியாவின் ரிக்கி பொண்டிங், இங் கிலாந்தின் 'ரெஸ் கொதிக், தென்னா பிரிக்காவின் கிப்ஸ், இந்தியாவின் சேவாக் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். இவர்கள் அவ்வணிகளின் நம்பிக்கைக்கு உரிய வீரர்களாக இருப்பதால் இது அந்தந்த அணிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் ஒட்டு மொத்தமாக அணியையே சரிவுக்கு கொண்டு சென்று விடுகின்றது.

இதற்காக மேற்படி வீரர்களை அவ் அணிகளின் நிர்வாகம் அணியில் இருந்து தூக்கு வதோ, நீக்குவதோ கிடையாது? அவர்கள் பிரகாசிப்பார்கள் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் அணியில் இடம் வழங்கப்படுகின்றது. இதற்காக அவர்கள் திறமையற்றவர்கள் என்பது பொருத்தமல்ல. இந்த நிலை அவுஸ்திரேலிய அணியில் இடம் பெறு வதில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும் .ஏனெனில் அவ்வணிக்குள் நுழைவதற்கு ஏராளமான திறமை வாய்ந்தவர்கள் வெளியில் காத்துக் கொண்டுள்ளனர்.


கிப்ஸ்

அந்த நிலைமை ஏனைய அணிகளுக்கு இல்லாமல் இருப்பதும் மேற்படி வீரர்கள் அணியில் சோபிக்காமலும் நீடிப்பதற்கு காரணமாக அமைகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இது நன்மையோ, தீமையோ என்பது ஒருபுறம் இருக்க மேற்படி அணிகள் பலமான அவுஸ்திரேலிய அணியின் இடத்தைப் பிடிக்க முடியாது இன்று வரை உள்ளமைக்கு காரணமாக அமைந்துள்ளது.

இதற்கு உதாரணமாக தென்னாபிரிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீர் கிப்ஸ் கடந்த பல மாதங்களாக அணிக்கு எந்த விதப் பிரயோசனமும் அற்றவராக அணியில் தொடர்ந்தும் நீடித்தார். இக் காலப்பகுதியில் தென்னா பிரிக்க அணி தொடர் தோல்விகளை சந்தித்ததுடன் தனது தகுதி நிலையையும் இழந்து போனது.

இதற்கு மாற்றீடாக தென்னாபிரிக்கா புதிய வீரர்களை புகுத்தியதா என்றால் இல்லை என்ற நிலையே உள்ளது. அதற்காக அவர்களையே நம்பி அணி இருப்பதும் தவறானது.

தற்போது கிப்ஸ் மீண்டும் பிரகாசிக்கின்றார் இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் 161 ஓட்டங்களை குவித்து அசத்தியுள்ளார். இது ஒரு வகையில் அவ் அணிக்கு பலமாக அமைந்துள்ளதுடன் தேவையான நேரத்தில் கிடைத்த வெகுமதியாகவும் அமைந்திருக்கலாம்.

எது எவ்வாறு இருப்பினும் தொடர்ச்சியாக சோபிக்க தவறும் வீரர் எவராயினும் அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டு அவுஸ்திரேலிய அணியைப் பின்பற்றினால் காலப் போக்கில் பலமான அணி உருவாக்க முடியும்.

## பெருமைக்கான போட்டி


பெடரர்

இளமைத்துடிப்புக்கு முதல் அங்கீகாரம் அளித்த அவுஸ் திரேலிய ஓபன் நூற்றாண்டு போட்டியை நேற்று ஆரம்பித் துள்ளது.

இதில் உலகின் முன்னணி வீர வீராங்கனைகள் குதித் துள்ளமை மேலும் சிறப்பானதாகும்.

குறிப்பாக ரோஜர் பெடரர், லெயிட்டன் ஹெவிட், அன்ரு ரொடிக், டெவன்போட், ஷெரபோவா, செரீனா, வீனஸ் என பல முன்னணி நட்சத்திரங்கள் மோதுகின்றனர்.


விம்பிள்டன் போன்ற போட்டிகளில் வெள்ளை நிற உடை தான் அணிய வேண்டும் என்ற நிலையை கடைசியாக பிறந்த கிராண்ட்ஸ் லாம்போட்டியான அவுஸ்திரேலிய ஓபனில் தான் வீரவீராங்கனைகளுக்கு முழு சுதந்திரம் அளிக் கப்பட்டது.


சேனா

டென்னிஸில் , விம்பிள்டன் (1877), அமெரிக்க ஓபன் (1881), பிரெஞ்ச் ஓபன் (1891), அவுஸ்திரேலிய ஓபன்(1905) ஆகிய நான்கும் கிராண்ட்ஸ் லாம் அந்தஸ்துபெற்றவை. இதில் ஆண்டின் தொடக்கத்தில் நடப்பது (சனவரி), அவுஸ் திரேலிய ஓபன் இம்முறை நூற்றாண்டு விழா (1905 - 2005) காணும் இந்த மகத்தான டென்னிஸ் தொடர் பல சோதனைகளை கடக்க வேண்டியிருந்தது.

1905 ஆம் ஆண்டில் மெல்பேர்னில் அவுஸ்திரே லேசியன் சம்பியன்சிப் என்றபெயரில்ஒரு குட்டிக் கிரிக்கெட் மைதானத்தில் போட்டிகள் தொடங்கின அப்போது 17 வீரர்கள் மட்டுமே பங்கேற்றனர். . இதில் 1922 இல் இருந்தே பெண்கள் கலந்து கொண்டனர். 1927 இல் அவுஸ்திரேலியன் சம்பி யன்சிப் என பெயர் மாற்றப்பட்டது. 1969 இல் அவுஸ் திரேலிய ஓபனாக மாறியது. 1972 இல் மெல்பேர்ன் நகரில் நிரந்தரமாக போட்டியை நடத்துவது என்று முடிவு செய்யப் பட்டது. இருந்த போதும் அமெரிக்க ,ஐரோப்பியர் இதனை புறக்கணித்தனர்.

இந்த குறையை நிவர்த்தி செய்யும் வகையில் 1988 ஆம் ஆண்டு பிரமாண்டமான டென்னிஸ் அரங்கம் மெல்பேர்னில் அமைக்கப்பட்டது. இருந்தும் அவுஸ்திரேலியாவே ஆதிக்கம் செலுத் தியது.


ஹெவிட்

இம்முறை சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் அசைக்க முடியாத வீரராக திகழ்கிறார். இதேபோல் நூற்றாண்டு பட் டத்தை வெல்ல மண்ணின் மைந்தன் லெய்டன் ஹெவிட் காத்திருக்கிறார்.

இதனை விட பல வீர வீராங்கனைகள் இழந்த பெரு மையை மீண்டும் பெற எத்தனிக்கும் நிலையில் நூற்றாண்டு கோப்பையை கைப்பற்றுவதற்கு கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. □

## கனவு நனவானது


பஷார்



பங்களாதேசிற்கு சுற்றுப் பயணம் மேற் கொள்வது என்றால் எதிரணிகளுக்கு அதை விட சந்தோசம் வேறெதுவும் இருக்காது.

ஏனெனில் டெஸ்ட் ஒரு நாள் என எந்தப் போட்டியாக இருந்தாலும் சரி அந்த அணியை எளிதில் வீழ்த்திவிடலாம். மோசமாக விளையாடி வரும் வீரர்கள் மீண்டும் தங்கள் பழைய நிலைக்கு திரும்பி அணியில் தொடர்ந்தும் நீடிக்கலாம். பல்வேறு சாதனை களும் படைக்கலாம் என்பன மனதளவில் அவ் அணிகளில் குடி கொண்டுவிடும்.

2000ஆம் ஆண்டு டெஸ்ட் அந்தஸ்து பெற்ற பங்களாதேஷ் நான்கு ஆண்டு களுக்கு மேலாகியும் ஒரு வெற்றி கூடப் பெறாது மேற்கண்டவாறே அடிபட்டு வெந்து நொந்து போவதே ஒவ்வொரு தொடரிலும், வழக்கமானதாக இருந்து வந்தது.

அதற்கு அவ் அணியின் துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்து வீச்சு என்பன மோச மாகவே இருந்து வந்தது. இதனால் அவுஸ் திரேலியா போன்ற முன்னணி அணிகள் பங்களாதேசுடன் விளையாடுவது பய னற்றது எனவும் கருத்து தெரிவிக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது.

அதே நேரத்தில் பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் அந்தஸ்தை பறித்து விடலாம் எனவும பல தரப்பில் இருந்தும் எதிர்ப்புக் குரல்களும் ஒலித்துக் கொண்டே இருந்தன.


கடந்த ஆண்டு வரை இப்படியே இருந்து வந்த பங்களாதேசின் கிரிக்கெட் வரலாறு புதிய ஆண்டில் வெற்றிப் பயணத்துடன் ஆரம் பித்துள்ளமை அதன் கிரிக்கெட் வரலாற்றில் புதிய அத்தியாயம் ஒன்று திறக்கப்பட் டதையே காட்டுகின்றது.

கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை பங்களாதேஷ் இழந்தாலும், துடுப்பாட்டம் பந்து வீச்சு இரண்டிலும் சிறப்பாக செயற்பட்ட துடன் ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டியில் பலமான இந்திய அணியை வீழ்த்தி தனது பலத்தை நிரூபித்தது. ஏனைய இரு நாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிய போதும் அப் போட்டியிலும் தனது சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தியது பங்களாதேஷ்.

இதே வேகத்தில் சிம்பாப்வே அணியை அழைத்த பங்களாதேஷ் தனது கறைபடிந்த கிரிக்கெட் வரலாறுக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

சிட்கொங்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அணித் தலைவர் ஹபிபுல் பசார் இரு இனிங்சிலும் அபாரமாக ஆட இணாமுல் ஹக் சுழலில் மாயா ஜாலம் காட்ட நான்கு ஆண்டுகளுக்கு மேலாக கிடைக்காத வெற்றிக் கனியை முதன் முறையாக ருசித்தது பங்களாதேஷ்.

இதனால் உலகக் கோப்பையை வென் றது போல் மைதானத்தில் வீரர்கள் ஓடியாடி மகிழ்ச்சியை வெளிப்படுத்த பங்களாதேஷ் ரசிகர்களுக்கு முதல் முறையாக பட்டாசு கொளுத்தி தங்கள் அணியின் மகிழ்ச்சியில் திளைக்கும் பாக்கியம் கிடைத்தது.


வட்மோர்

இது இவ்வாறிருக்க இவ் அணியின் விரை வான வளர்ச்சிக்கு வீரர்களின் கூட்டு முயற்சி காரணமாக இருக்கும். அதேவேளை இதன் பின்னால் பயிற்சியாளர் எனும் பலம் உள்ளதை எவரும் மறுத்து விட முடியாது.

அவர் யாருமல்ல இலங்கை அணியை உலக சம்பியனாக்கிய பெருமைக்குரிய வட்மோர். தற்போது பங்களாதேஷின் பயிற்சி யாளராகவுள்ளார். இவரது பயிற்சியின் கீழ் தான் அவ் அணி வளர்ச்சி கண்டு வருகிறது. இவர் பயிற்சியில் பல புதுமை களை புகுத்துவதில் வல்லவர்.

தற்போது சர்வதேச அளவில் முன்னணி அணிகளுக்கும் பங்களாதேசுக்கும் உள்ள வேறுபாடுபயிற்சிப்போட்டிதான். இந்தியா, இங் கிலாந்து, அவுஸ்திரேலிய போன்ற அணி கள் பயிற்சி பெற பல உள்ளூர் போட்டிகள் உள்ளன. இது போன்று பங்களாதேசுக்கு எந்தப் பயிற்சி போட்டியும் கிடையாது. எனவே இதில் பலத்த மாற்றம் தேவைப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இளம் வீரர் களைக் கொண்ட பங்களாதேஷ் அணி இலங்கையைப் போன்று மகத்தான வெற்றி பெறுவதுடன் கிரிக்கெட் அரங்கில் அசைக்க முடியாத அணியாகவும், வலம் வரலாம்.

## கண்டெடுப்பு

கண்டெடுக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகளும் சில ஆவணங்களும் எமது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது அவற்றின் விபரங்கள் வருமாறு;

***தேசிய அடையாள அட்டைகள் விபரம்:–***

கிழவி தோட்டம் கரவெட்டி கிழக்கு கர வெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ஸ்ரீகாந்தன், இந்திராபுரம் முகமாலை எழுதுமட்டுவாளைச் சேர்ந்த செல்லத்துரை பாலகுமார், ஊற்றுப்புலம் கிளிநொச்சியை சேர்ந்த சுப்பையா சுரேஸ், பனிக்க நீராவி புளியங்குளத்தைச் சேர்ந்த நாகப்பன் சிவராசா, கிழு வானை ஒழுங்கை கோப்பாய் மத்தியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி கலாதர், 3ஆம் கட்டையடி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கைலாயப்பிள்ளை லோகராசா, ஜெயந்திநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த மரியதாஸ் யூலியஸ் ஜெயக்குமார், செம்பியன் பற்று வடக்கு செம்பியன் பற்றைச் சேர்ந்த மதுரநாயகம் கௌசிகா,

மேலும் மதுரநாயகம் கௌசிகா செம்பியன்பற்று வடக்கு தாளையடியைச் சேர்ந்தவருடைய பயண அனுமதி அட்டை ஜெக்வீரதேவர் என்பவருடைய நிலையான பயண அனுமதி அட்டைக்கு விண்ணப்பம் கையேற்றமைக்கான உறுதிச் சிட்டை, மரியதாஸ் யூலியஸ் ஜெயக்குமார் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம், கே.லோகராசா என்பவரது இரண்டு தொழில் அட்டைகள், ஜெகவீர என்பவரது தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் திலகவதி (17.061969) என்பவரது பிறப்பு பதிவுக்குறிப்பு), முனியாண்டி கனகமணி இல.86/2 திருவையாறு கிளிநொச்சியைச் சேர்ந்தவரது குடும்பப் பதிவு அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.


2005 **Mega** *Intelligent Test*

கணினி கற்கைநெறிகளுக்கான

மெகா போட்டிப் பரீட்சை

**ASIAN COMPUTERS வழங்கும்**

**கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை**

Registered with Ministry of Tertiary & Vocational Education

**கல்வி ஆண்டு 2005**

**வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்**

1 Diploma in Computer Software Engineering — 5 months — DCSE

2 Advanced Diploma in Web Multimedia — ADWM

3 Professional Diploma in e - Developer — PED

4 Diploma in Office Automation with Accounting — DOA

5 Advanced Diploma in Hardware & Networking — ADHN

6 Professional Diploma in Graphic Design — PDGD




**யாருக்கு ?**

அனைவருக்கும் கணினிக்கல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

**பரீட்சைகள் பற்றிய விபரம்**

பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

**மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்**

இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள **ASIAN** கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**Affiliated to Asian Computers**

(சி-11135)

| கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. | யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | 2 G, ஸ்ரான்லி வீதி. | 108,K.K.S.வீதி, சுன்னாகம். | கொடிகாமம் வீதி, நெல்லியடி. | கண்டி வீதி, சாவகச்சேரி. |
| | Tel : 021-222 5677 | Tel : 071-2501589 | Tel : 077-3122198 | Tel : 077-3035987 |


## ஜே.வி.பி-சு.க முறுகல் மீண்டும் அதிகரிப்பு

சிறிலங்காவில் ஆளும் கூட்டுக்கட்சிகளுக்குள் தற்சமயம் மீண்டும் முறுகல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஜே.வி.பிக்கும் சனாதிபதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலேயே இந்த முறுகல் நிலை தோன்றியுள்ளது.

அண்மைய சுனாமி பேரலை தாக்குதலின் பின்னர் அரசாங்க இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் ஜே.வி.பிக்கு பிரசாரங்களை குறைக்குமாறு சனாதிபதி தரப்பில் இருந்தே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


COMITE INTERNATIONAL GENEVE

**Vacancies – Immediate**

**Translators with medical background**

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced translators. The candidate should have the following qualifications:

**Requirements:**

- Team spirit, reliability and professional commitment
- High motivation and willingness to learn, resistance to stress
- Good command of English, spoken and written
- Relevant professional experience
- Good computer and reporting skills
- Valid driving permit is an asset

**Tasks:**

- Oral translation between the doctor - patient / nurse - patient and vies versa
- Written translation of documents and forms
- Oral translation in meetings and training sessions
- Taking of written minutes of meetings

**Salary** : Depending on qualifications and experience

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday(19.01.2005) and make an appointments with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd,**
**Kanagapuram,**
**Kilinochchi.**

**TP: 021-2285940, 0712296680**

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**

(5560)



**இலங்கை சமாதான நீதிபதி பதவி பெற்ற**

**தம்பாபிள்ளை - ஸ்ரீபாலேஸ்வரன்**

**(இலங்கை வங்கி முல்லைத்தீவு)**

**அவர்களை**

**பாராட்டி நிற்கின்றோம்**



சிவனவன் சிந்தையை சீராய் தவங்கேட்டு
அவன் அருளால் கிடைத்த அருமருந்த புத்திரன்
தம்பாபிள்ளை பெற்ற தவமுதல்வன் சிறியவரை
எம் பெருமான் ஆசிப்பார் என்று முயர்வுண்டு

சங்கம் சங்கமென்று அங்கங்கொண்டுழைத்து வாழும்
எங்களாலய போசகரே மங்கிடா நல் மாணிக்கமே
உங்கள் சமூகப்பணியை ஊரெல்லாம் அறியும் படி
பொங்கிடும் ஆற்றல் வளர பொன்னம்பலத்தான்
ஆசிப்பான்.

கூட்டுறவை புதுநகரில் கூடி வளர்த்த வள்ளல்
நாட்டின் துயர்க் காலம் செஞ்சிலுவையில் உழைத்து
வந்தார்.
படித்த பள்ளி வளர பழைய மாணவர் சங்கத்திலிருந்து
முடிந்த நற்காரியங்கட்டு முடிபோலும் இப்பதவி

நீதியென்றும் மாறாத நிமிர்ந்த நடையுடையார்க்கு
நீதிபதிப் பதவி நிறுத்துக் கொடுத்த பதவி
ஆதி அந்தம் இல்லாத அப்பனாம் சிவநகரான்
வாதியின்றி அருள்தருவான் வேதியனை வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
சிவன் ஆலயம்,
சிவநகர்,
மு.புதுக்குடியிருப்பு.

(சி11207)

## Vacancies - Immediate Drivers

The ICRC has vacancies for the above positions to support the sub-delegation in various Humanitarian programmes in Puthukkudiyiruppu and Kilinochchi areas, in accordance with ICRC security regulations.

We are looking for highly competent and experienced drivers. The candi-date should have the following qualifications:

- be experienced, confident and safe Drivers
- possess a valid (Class A) Sri Lankan Driving Licence
- speak and be able to understand English
- have knowledge of basic vehicle maintenance

**Job Description:**

- to drive Land cruisers for the different ICRC programmes
- to drive the truck to support the ICRC work
- to carry out checks and emergency maintenance on vehicles
- to use HF/VHF radio within the vehicle

**Salary : Depending on qualifications and experience**

Suitable candidates are requested to contact ICRC Kilinochchi office with the CV on or before Wednesday(19.01.2005) and make an appointment with the Administrator.

**ICRC Office,**
**16, Depot Rd,**
**Kanagapuram,**
**Kilinochchi.**

**TP: 021-2285940, 0712296680**

(5561)

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**


- பீகார் சட்டசபைத் தேர்தல் -

# வாஜ்பாய், அத்வானி சூறாவளிப் பிரச்சாரம்

# லல்லுபிரசாத்தை முறியடிக்க வியூகம்

(புதுடில்லி)

பீகாரில் ஆளும் ரா'டிரிய ஜனதாதள ஆட்சியை வீழ்த்தி பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வியூகம் அமைத்துள்ளது. இதற்காக வாஜ்பாய் மற்றும் அத்வானி ஆகியோர் சூறாவழிப் பிரச்சாரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.பீகாரில் வருகிற பெப்ரவரி மாதம் 3 கட்டமாக தேர்தல் நடக்க இருக்கிறது. அங்கு ஆளும் ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதில் தீவிரமாக உள்ளது.

கட்சித் தலைவரும், மத்திய ரெயில்வே மந்திரியுமான லல்லு பிரசாத்யாதவ், முதல்-மந்திரி ராப்ரிதேவி ஆகியோர் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள் ளனர்.

சமீபத்தில் பீகாரில் எடுக்கப்பட்ட தேர்தல் கருத்துக் கணிப்பில் அங்கு எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்காது என தகவல் வெளியாகியுள்ளது. இதனால் எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா ராஷ்டிரிய ஜனதா தளத்தை வீழ்த்த புதிய வியூகத்துடன் களம் இறங்க திட்டமிட்டுள்ளது. அதன்படி முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் துணைப் பிரதமர் அத்வானி ஆகியோர் பீகாரில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு அனைத்துத் தொகுதியிலும் பிரச்சாரம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களுடன் கட்சியின் முக்கிய பிரமுகர்களான உமாபாரதி, வெங்கையாநாயுடு, பிரமோத் மகாஜன், முரளி மனோகர்ஜோஷி, சுஷ்மா சுவராஜ், முதல்-மந்திரி பாபுலால் கவுர், வசுந்தரராஜே சிந்தியா ஆகியோரும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

பீகார் மாநில பாரதீய ஜனதாக் கட்சித் தேர்தல் பிரசார கமிட்டி பொறுப்பாளராக நடிகரும், முன்னாள் மத்திய மந்திரியுமான சத்ருகன்சிங்னா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும் தலைவர்கள் சூறாவளிப் பிரச்சாரம் மேற்கொள்வார்கள்.

## வங்க தேசத்தில் 13ஆவது சார்க் மாநாடு

அடுத்த மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள 13 ஆவது சார்க் உச்சிமாநாட்டுக்கான அனைத்து ஏற்பாடுகளும் வங்கதேச தலைநகர் தாகாவில் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. மாநாட்டின் பாதுகாப்பிற்காக மட்டும் 12 ஆயிரம் பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வங்கதேச வெளியுறவுத்துறை ஆலோசகரும், மாநாட்டின் தேசிய தலைமை ஒருங்கிணைப்பாளருமான ரியாஸ் ரகுமான் தலைமையில், சார்க் உறுப்பு நாடுகளின் தூதர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இரண்டு நாள் நடைபெறும் சார்க் மாநாடு குறித்த அனைத்து விபரங்களையும் இந்தக் கூட்டத்தில் ரியாஸ் ரகுமான விளக்கினார்.


## ஐந்தாம் ஆண்டு நினைவுகளில்



ம
ல
ர்
வு
★★
1980
★
11
★
24

உ
தி
ர்
வு
★★
2000
★
01
★
16

## மேஜர் மன்மதன்

(போர்ப் பயிற்சி ஆசிரியர்)
நாகேந்திரன் வாணிகாந்தன்
சாவகச்சேரி, யாழ்ப்பாணம்

மனமே! மனமே!
மன்மதனை மறக்க முடியலையே
நீங்காத நினைவாக நெஞ்சினிலே வாழ்கின்றாய்
நித்தம் உனது ஞாபகமே மனதினிலே
ஆண்டுகள் ஐந்து போனதே
போன திசை பார்த்துப் பார்த்து கண்களும் ஏமாந்ததே
மண்ணுக்குள் மறைந்த மாவீரனே!
மீண்டும் மறு பிறவி எடுத்து
மன்மதனாக நீ வருவாயென
காத்திருக்கின்றோம் உனது நினைவுடன்.

இந்நாளில் அனைத்து மாவீரர்களையும் நினைவில் கொண்டு 18.01.2005 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
வை.எம்.சி.ஏ வீதி,
பாரதிபுரம், கிளிநொச்சி

தகவல்:
**மன்மதன் குடும்பத்தினர்**

(5565)



# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை :- அலுவலர் (பயிலுநர்)**

**தகைமைகள் :-** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

*மாதாந்த ஊதிய அளவுத்திட்டம் :- 4,500 + 6,000*

*அகவை எல்லை :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.*

**02. பணிநிலை :- அலுவலக உதவியாளர் தரம் -03**

**தகைமைகள் :-**
i. க.பொ.த.(சாதாரண தர) தேர்வில் கணிதம் (42/கணிதம்II), தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
ii ஆண் பாலார் மட்டும்.

*மாதாந்தஊதியம் :-* $\frac{2,870 - 4,070}{60 \times 20} + 6,000$

*அகவை எல்லை:- 18 - 25 வருடங்கள்*

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுக்கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "**ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை -அலுவலர் (பயிலுநர்)**" "**ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலக உதவியாளர் தரம் -03**" எனக் குறிப்பிடப்பட்டு 2005.01.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

**குறிப்பு :-**
01. முழுமையாக நிறைவு செய்யப்படாத சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (**மனிதவள மேலாளர், மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ் சாலை கரடிப்போக்கு, கிளிநொச்சி.** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி-11079)

# இங்கிலாந்து வீரர்கள் காயத்தால் அவதி
## 5 ஆவது போட்டியில் புதிய பந்து வீச்சாளர்




தென்னாபிரிக்காவுடனான 5-ஆவது டெஸ்ட் போட்டிக்காக குளொசஸ் டர்ச்சயர் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜோனாதன்லூயிஸிக்கு இங்கிலாந்து அணி அழைப்பு விடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவுடனான போட்டிக்கான அணியில் 29 வயதான லூயிஸின் பெயரும் இடம் பெற்றிருந்ததால் இவருக்கான அழைப்பு எதிர்ப்பார்க்கப்பட்டதாகவே இருந்ததாக இவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அணியில் உள்ள வீரர்களில் ஹார்மிசன், சைமன் ஜோன்ஸ் ஆகியோர் காயம்காரணமாக அவதிப்படுவதால் அணி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

ஜேம்ஸ்அண்டர்சனும் உடல்* நலக் குறைவாகவுள்ளதாக தெரியவருகிறது.

# நடுவர்களின் தீர்ப்பை நிராகரித்தார்
## வோகனுக்கு 5,500 பவுண் அபராதம்



தென்னாபிரிக்க-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 2வது டெஸ்ட் போட்டியின் 5 ஆம் நாளில் வெளிச்சம் போதாமையினால் ஆட்டம் நிறுத்தப்பட்டமை தவறானது என இங்கிலாந்து அணித்தலைவர் மைகல் வோன் கூறியது நடுவர்களின் தீர்ப்புக்கு முரணானது என தெரிவித்து அன்றைய போட்டி ஊதியத்தில் 5.500 பவுணை அபராதமாகச் செலுத்தவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.சர்வதேச கிரிக்கட்சபையின் இரு விதிமுறைகளுக்கமைவாக அவர்மீது இக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச விதிமுறைகள் 4 இன் படி ஒருவர் கடுமையான தண்டனையை பெறவேண்டுமாயினும் அவர் சாதாரண குற்றம் புரிந்தவகையில் இரண்டு போட்டிகளுக்கான தடையும் விதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பாகிஸ்தானிய நிறைவேற்றதிகாரி கூறுகையில்; அதிகூடிய தண்டனை விதிக்கப்படுமிடத்து மேன் முறையீடு செய்யலாம் என்றார்.

# டாக்கா டெஸ்ட் கிரிக்கெற்போட்டி; தைபு சதம்
## பங்களாதேஷுக்கு 374 ஓட்ட வெற்றி இலக்கு





பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக கிடையில் டாக்காவில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் வெற்றி பெற 374 ஓட்டங்கள் என்ற இலக்கை சிம்பாப்வே நிர்ணயித்துள்ளது.

நான்காம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது வெற்றி இலக்கை நோக்கி ஆடும் பங்களாதேஷ் விக்கெட் இழப்பின்றி 98 ஓட்டங்களை பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் ஜாஷிட் ஓமர் 36 ஓட்டங்களையும்,நபீஸ் இக்பால் 55 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.


முன்னதாக பங்களாதேஷை விட 87 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய சிம்பாப்வே அணித்தலைவர் தைபுவின் சதத்தின் உதவியுடன் 286 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

தைபு மிகச்சிறப்பாக ஆடி 153 ஓட்டங்களை குவித்தார். இவரைவிட ரெயிலர் 78 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் முதல் இனிங்சில் 7 விக்கெட்டுக்களை கைப்பற்றிய இனாமுல் ஹக் 5 விக்கெட்டுக்களையும்,மொரட்சயா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சிம்பாப்வே முதல் இனிங்சில் 298 ஓட்டங்கள்,பங்களாதேஷ் முதல் இனிங்சில் 211 ஓட்டங்கள். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

முதலாவது போட்டியில் ஏற்கனவே வெற்றி பெற்ற பங்களாதேஷ் இப்போட்டியை சமப்படுத்தினாலேயே தொடரைக் கைப்பற்றி விடும்.







மியானில் நடைபெறும் இத்தாலிய தொடர் கால்பந்தாட்டப் போட்டி ஒன்றில் மோதும் மிலான் அணியின் அன்ரிட் சிவ்சென்கோவும் யுடினேஸ் கழகத்தின் மைக்கல் பசின்சாவும்.





# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்
## காலஸ் மோயா அதிர்ச்சித் தோல்வி



உலக டென்னிஸ்தர வரிசையில் 5 ஆம் இடத்திலுள்ள காலஸ் மோயா நேற்று மெல்போர்னில் ஆரம்பமான அவுஸ்திரேலிய ஓபன் போடடியின் முதற் சுற்றில் ஸ்பெயின் வீரர் கார்சியாலொபேசிடம் 7-5,6-3,3-6,6-3, என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்துள்ளார்.

இவர் அண்மையில் சென்னை ஓபன் போட்டியில் இவ்வருடத்திற்கான முதல் வெற்றியைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




கார்சியாலொபேஸ் இரண்டாவது சுற்றில் கெவின் கிம் அல்லது லீ குயின்ங் கைச் சந்திப்பார்.

இன்னுமொரு முதற்சுற்றுப் போட்டியில் 4 முறை உலக சம்பியன் பட்டம் வென்ற அன்ரே அகாசி ஜெர்மனிய வீரர் டயட்டர், கைணடிமன் என்பவரை6-4,6-3,6–0 என்ற கணக்கில் வென்றார். அகாசி அண்மையில் இடுப்பில் ஏற்பட்ட காயத்தினால் அவதியுற்றமை தெரிந்ததே.

இவர் அடுத்த சுற்றில் பிரான்சின் ஒலிவர் பெஷன்ஸ் அல்லது ஜெர்மனியின் ரெயினர் சுயெட்டரை எதிர்த்து ஆடுவார்.

ஏனைய போட்டிகளில் ஜுனியர் சம்பியனான கேய்ல் மன்பில்ஸ் அமெரிக்காவின் றொபி கிளப்ரியை 1-6,6-3,6-4,7-6(8-6) என்ற கணக்கில் வென்றார். 2002 ஆம் ஆண்டு சம்பியனான தோமஸ் ஜோகன்சன் பீட்டர் லக்சாக்கை 7-6,(7-5) 4-6,6-3,4-6,6-0 என்ற செட்டிலும் பிரான்ஸ் ஓபன் சம்பியன் கஸ்டன் கோடியோ ஜஸ்ரின் ஜிமல்ஸ்டொப்பை 7-6(7-3)6-4,6-3 என்ற செட்டிலும் வென்றுள்ளனர்.

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான 4-வது டெஸ்ட் இங்கிலாந்து அணிக்கு அபார வெற்றி



தென்னாபிரிக்கா-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் யோகனாஸ்போர்க்கில் நடைபெற்று வந்த நான்காவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 77 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

போட்டியின் இறுதிநாளான நேற்று இங்கிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மார்க்கஸ் ரெஸ் கொதிக்கின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் 325 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை தென்னாபிரிக்காவுக்கு நிர்ணயித்தது. ரெஸ் கொதிக் 180 ஓட்டங்களைக் குவித்தார்.






இந்த நிலையில் பெரும்பாலும் போட்டி வெற்றி தோல்வியற்ற முடிவுக்குச் செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இங்கிலாந்துப் பந்து வீச்சாளர் ஹொக்ஹாட் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி வெற்றிக்கு வழி சமைத்தார். இவரைவிட பிளின்டொப் இரண்டு விக்கெட்டுக்களையும் ஹைல்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



தென்னாபிரிக்கா சார்பில் கிப்ஸ் 98 ஓட்டங்களையும், சிமித் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். இவ்வெற்றி மூலம் ஐந்து போட்டி கொண்ட தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற நிலையில் முன்னிலை வகிக்கிறது.



## சிந்தனைக்கு

சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப்பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப் படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அழிவைநோக்கிச் செல்லும் அரசு!

ஆயுதக் கொள்வனவிற்கெனச் சிறிலங்கா ஆயுதப் படையின் உயர் மட்டக்குழு ஒன்று ஈரான் பயணமாகியுள்ளது. இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டே கொட தலைமையிலான முப்படை அதிகாரிகளையும் உள்ளடக்கிய இக் குழு 15 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான கொள்வனவிற்கான ஆயுதங்களைப் பார்வையிடும் என இராணுவ வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன.

சுனாமி பேரலைகளினால் நாட்டில் பேரழிவு ஏற்பட்டுள்ள போதிலும் சிறிலங்கா அரசாங்கம் தனது சிந்தனைப் போக்கில் எத்தகைய மாற்றங்களையும் செய்யவில்லை என்பதற்கான வெளிப்பாடுகளுக்கு இதனை குறியீடாகச் சுட்டிக்காட்ட முடியும்.

சுனாமி பேரலை இலங்கையைத் தாக்கியபோது இன ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அளவு வேறுபட்டிருக்கலாம். ஆனால், சகல இன மக்களையும் பேரலைகள் தாக்கியது என்பது வெளிப்படையானது. உயிரழிவிலும், சொத்துடமை அழிவிலும் விகிதாசார வேறுபாடு இருக்கலாம். ஆனால், இழப்புக்கள் அனைவருக்கும் ஏற்படவே செய்தது.

இதேவேளை, இப்பெருமனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத வேறுபாடுகள் அற்ற நிலையில் மக்கள் பரஸ்பரம் உதவிகளையும் ஒத்தாசைகளையும் மேற்கொண்டதும் உண்டு. ஆனால், அவலத்தின்போது மக்கள் மத்தியில் ஏற்பட்ட புரிந்துணர்வு அன்றி இரக்க உணர்வு, சிங்கள அரசியல் கட்சிகளிடமும், ஆட்சியாளர்களிடமும் ஏற்படவில்லை. அவர்கள் அன்றும், இன்றும் இனவாதிகளாகவும், இனவாத செயற்பாடு மிக்கவர்களாகவுமே இருந்து வருகின்றனர். ஏனெனில், அவர்களின் அரசியல் முதலீடு அதுவாகவே உள்ளது.

சுனாமியால் தமிழர் தாயகப் பிரதேசம் பாதிப்பிற்கு உள்ளானபோது அவர்கள் உடனடியாக நிவாரணப் பொருட்கள் அனுப்பாதது மட்டுமல்ல, தமிழர் தாயகப் பகுதியில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து இருட்டடிப்புச் செய்யவுமே முனைந்தனர். தமிழர் தாயகத்தில் ஏற்பட்ட அனர்த்தம் குறித்த தகவல்கள் அரச ஊடகங்களில் தாமதமாகவே வெளிப்படுத்தப்பட்டது. இவை கூடத் தவிர்க்க முடியாத நிலையிலேயே ஏற்பட்டது.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகா போன்று உயர் மட்டத்தில் உள்ள அரசியல் வாதிகள் கூடத் தமிழர் தாயகப் பகுதிக்கு சுனாமி பேரலைகளால் விளைவித்த அனர்த்த[illegible]ால் ஏற்பட்ட மகிழ்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகள் இயக்கம் பேரழிவைச் சந்தித்தாகவும், அவர்கள் தற்பொழுது போரிடும் நிலையில் இல்லை எனக் கூறி திருப்திப்பட்டுக்கொண்டார்.

இதன் பின்னர் தமிழர் தாயகப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் நிவாரணப் பணிகளைக் குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில், அரசாங்கச் செயலணிக்குழு என்ற வகையில் நிவாரணப் பொருட்களின் விநியோகத்திற்குக் கட்டுப்பாடும், இடையூறுகளும் விதிக்கப்பட்டன. இதன் அடுத்த கட்டமாக நலன்புரி நிலையங்களை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதேவேளை, சர்வதேச நாடுகளில் இருந்து சிறிலங்காவில் பெருமளவு நிவாரணப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தபோதும் வழமைபோலவே பாரபட்சமான முறையில் இவை தமிழர் தாயகப் பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக் கப்படாது தமிழர் தாயகம் புறக்கணிக்கப்பட்டது. மறுபுறத்தில் தமிழர் பிரதேசங்களுக்கு அரசாங்கம் நிவாரணப் பொருட்களும், உதவிப் பொருட்களும் அனுப்பிவைப்பதாகப் பிரச்சாரம் செய்யப் பட்டது.

அதாவது, இப்பேரழிவை மக்கள் சந்தித்தபோதும் ஆட்சியாளர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. இனவாதத்தையே கையில் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இதன் உச்ச வெளிப்பாடாக இலங்கை சந்தித்த பேரழிவை பார்வையிட வந்த ஐ.நா. செயலர் கொபி அனானை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் செல்லவிடாது அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டதை குறிப்பிட்டுக் கூற முடியும்.

அது மட்டுமல்லாது அரசாங்கத்தின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. யின் தலைவர் சேமவன்ச அமரசிங்க ஐ.நா. செயலருக்கு எழுதிய கடிதமானது இவ் அரசியல் கட்சிகள் இனவாதத்தில் எந்தளவு மூழ்கியுள்ளனர் என்பதையே வெளிக்காட்டியது. ஆனால், ஒன்று சோமவன்சவின் இக்கடிதமானது அவர் எத்தகைய இனவாதி என்பதையும் எந்தளவிற்கு கேவலமான மனிதன் என்பதையும் வெளிக்காட்டியதும். உண்மையே

இத்தகைய இனவாத போக்கின் இறுதிவெளிப்பாடாகவே நாடு பேரழிவைச் சந்தித்துள்ள நிலையிலும், ஆயுதக்கொள்வனவிற்கென சிறிலங்கா இராணுவ உயர்மட்டக் குழு ஈரான் சென்றுள்ளமையாகும். அதாவது, சிறிலங்கா அரசாங்கம் பேரழிவின் மத்தியில் நின்றும் மற்றுமொரு அழிவைப் பற்றிச் சிந்திக்கின்றதே ஒழிய, அழிவில் இருந்து மீண்டுவருவது பற்றியோ, தனது கடந்த காலப் போக்கைத் திருத்திக் கொள்ள முற்படுவதாகவோ இல்லை. அழிவை நோக்கிப் போவதாகத் தீர்மானித்துவிட்டால் யார் கூறித்தான் திருந்தப் போகிறார்கள்.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் நிவாரணங்கள் முழுமையாக கிடைக்கவில்லை

### - சர்வமதக் குழு குற்றச்சாட்டு

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் உரிய முறையில் அனைவருக்கும் சென்றடையவில்லை என சர்வமதத் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது குறித்து கம்புறுகமவஜிரதேரர் தெரிவிக்கையில், அரசாங்கமும் அரச அதிகாரிகளும் நினைப்பது போல் நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட அனைவரையும் சென்றடையவில்லை. அவ்வாறு அனைவரையும் உரியவகையில் சென்றடைய வேண்டுமானால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சர்வமதங்களையும் சேர்ந்த தலைவர்களும் அனர்த்த முகாமைத்துவக் குழுவில் சேர்க்கப்படவேண்டும்

ஏனெனில்மதத் தலைவர்களே அந்தப்பகுதி மக்களோடு நெருக்கமாக இருப்பவர்கள் அவர்களுக்கு உடனுக்குடன்உண்மை நிலை தெரிய வரும் இதனை சம்பந்தப் பட்ட சகலரும் உணர வேண்டும். என்றார் (32)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அமைச்சர்கள் வருவது ஏமாற்று வேலை

### - தமிழ்க் கூட்டமைப்பு பா.உ அரியநேத்திரன்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை சிறிலங்கா அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பார்வையிட வருவது ஒரு ஏமாற்று வேலை என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு 20 நாட்கள் கடந்து விட்ட நிலையில் அமைச்சர்கள் என்றும் பிரதி அமைச்சர்கள் என்றும் 20ற்கும் மேற்பட்டவர்கள் வந்து திரும்பியுள்ளார்கள். அது மட்டுமன்றி நிவாரணங்கள் தொடர்பாக பல வாக்குறுதிகளையும் அளித்துள்ளார்கள். ஆனால் இதுவரை எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்பட்டதாக இல்லை. இந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் வருகை சர்வதேச சமூகத்திற்கு பேய்க்காட்டும் ஒரு நடவடிக்கையாகவே மக்கள் கருதுகின்றார்கள். அது மட்டுமன்றி தமிழ் மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. இந் நிலையில் இவர்களுடைய வருகையில் கலந்து கொள்வதிலோ அவர்களை சந்திப்பதிலோ எவ்வித அர்த்தமும் இல்லை என்றார் அவர்.

# சுனாமிஅனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு கல்வியை தொடர முடியாதோர் தொடர்பு கொள்க

சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு தமது கல்வியை தொடர முடியாதுள்ள மாணவர்கள் உடனடியாகவே தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தம் கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ள மாணவர்களுடைய கல்வி எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கு சகல உதவிகளையும் வழங்கத் தமிழ் மாணவர் ஒன்றியம் திர்மானித்திருக்கிறது

எனவே இவ் உதவி வழங்கலில் பயன் பெறுவதற்காக இவ் அழைப்பினை விடுத்துள்ள தமிழ் மாணவர் ஒன்றியம், உதவிகள் தேவைப்படுவோர் கோவில் வீதி நல்லூரிலுள்ள தமது தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (33)

# சிறிலங்காவின் ஆயுதக் கொள்வனவு போர் அச்சத்தை ஏற்படுத்துகிறது

### ரவிராஜ் பா. உ குற்றச்சாட்டு

ஈரானிடம் இருந்து சிறிலங்கா அரசாங்கம் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கூறியுள்ளதாவது, இராணுவ சமநிலையின் அடிப்படையில் தற்சமயம் இலங்கையில் போர் நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்து வருகிறது. அதேநேரம் நாடு இன்று பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளது. எனினும் வெளிநாட்டுப் படைகளின் பிரசன்னத்தின் மத்தியில் இடம் பெறும் இந்த ஆயுதக் கொள்வனவானது மீண்டும் ஒரு போர் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார் .

# மரபணுப் பரிசோதனை மூலம் 19 வெளி நாட்டவர் அடையாளம் காணல்

சுனாமி கடல் பேரலையால் உயிரிழந்த பத்தொன்பது வெளி நாட்டவரின் உடல்கள் மரபணுப் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிறிலங்காப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாகப் பொலிஸ்மா அதிபர் மேலும் கூறுகையில், இதுவரை ஐம்பத்தி நான்கு சடலங்கள் மரபணுப் பரிசோதனைக் குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் மரணுப்பரி சோதனை மூலம் அடையாளம் காணப்பட்ட உடல்களை உரிய நாடுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# தேவை உள்ளவரை மட்டும் அமெ. படைகள் நிலைகொள்ளும்

### -அமெ.பிரதி பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப் படும் புனரமைப்பிற்குத் தேவையான உதவிகளை வழங்குவதே அமெரிக்கப்படையினரின் பிரதான நோக்கமெனவும் தேவையேற் படும் வரையிலேயே இலங்கையில் நிலைகொள்வர் எனவும் அமெரிக் காவின் பிரதிப் பாதுகாப்பு செயலாளர் போல் வூல்வ்பீற்ஸ் கூறியுள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள இவர் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகள், பாதுகாப்புப் பிரிவினரிடமிருந்து சாதாரண பொதுமக்களின் கரங்களுக்கு விரைவில் செல்ல வேண்டும் எனக் கூறிய அவர். எழுநூறிற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் இலங்கைக்கு புனரமைப்பு பணிகளுக்காக வந்துள்ளனர். இவற்றில் அனேகமானோர் பொறியியலாளர்கள் இவர்கள் நீண்ட காலப் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுவார்கள் இந்த இராணுவக் குழுக்கள் யுத்த நடவடிக்கையை மேற் கொள்ள மாட்டார்கள் என்றார்.

அதேவேளை எந்த நாட்டு இராணுவ வீரரும் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் காணத் தான் விரும்ப வில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.



தமிழீழத்தேசியத்தலைவர் அவர்கள் நேற்று புத்திஜீவிகளுடன் ஆலோசனை நடத்துகையில்...

# றொரன்ரோவில் கத்திக்குத்தில் தமிழ் இளைஞர் ஒருவர் பலி

கனடாவில் 18 வயது இலங்கை தமிழ் இளைஞர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி கடந்த வெள்ளிக்கிழமை மரணமாகியுள்ளதாக றொரன்ரோ பொலிசார் தெரிவித்ததாக நஷனல் போஸ்ட் எனும் கனேடிய பத்திரிகை நேற்றுமுன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கொலைச்சம்பவம் பற்றிஅப் பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், தனுச ஜெயகுமாரன் என்று அடையாளம் காணப்பட்டுள்ள இந்த இளைஞன், இறப்பதற்கு நான்கு மணித்தியாலங்களுக்கு முன்னர் தான், இலங்கையில் இருக்கும் தனது பெற்றோரை கனடாவிற்கு அழைப்பதாக அவர்களுக்கு வாக்குறுதியளித்திருந்ததாகவும் தெரியவருகின்றது. கருத்து முரண்பாடுகளினால் ஏற்பட்ட கைகலப்பினாலேயே இரு தமிழ் இளைஞர் குழுக்களுக்கு இடையில் [illegible]நக் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றதாக தெரியவருகின்றது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக இரு இளைஞர்கள் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஐவரை கனேடியப் பொலிசார் தேடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இரணைமடுக்குளத்தில் வீழ்ந்து வயோதிபப் பெண் மரணம்

இரணைமடுக்குளத்திலிருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நாகநாதர் தங்கம்மா (வயது 85) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம்திகதி இடம்பெற்ற சம்பவத்தில் வட்டக்கச்சியில் வசிக்கும் ஒரு மகளுடையவீட்டிலிருந்து திருவையாற்றில் வசிக்கும்மற்றொரு மகளின் வீட்டுக்குச் சென்ற இவர் கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் பிரசாதம் சாப்பிட்டுவிட்டு கைகழுவச்சென்ற வேளையிலேயே குளத்தில் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலதிக விசாரணையை கிளி.காவல் பணிமனையினர் மேற்கொண்டுவருகின்றன. (12)

## திருமலையில்....

முதற்தினம் பகலுணவிற்குப் பிறகு எந்தவித உணவுமின்றிப் பட்டினியுடன் இருப்பதையும், அவர்களது தேவைக்கான எந்தவித உணவுப் பொருட்களும் கையிருப்பிலில்லாதது கண்டு அவர்களின் உணவிற்கு தனது செலவிலேயே ஏற்பாடுகளைச் செய்ததோடு அவர்களின் நிலைமையை எண்ணி மிகவும் வேதனையடைந்தார்.இதன்பிறகு திருமலை நகரிற்கு வந்த பாராளுமன்ற உறுப்பினர் நிவாரணப் பணிகளிற்கென நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரியிடம் திருமலைக்கான உணவு விநியோகம் எப்படியுள்ளதென வினவியபோது, அவ் அதிகாரி இரண்டு மாதங்களிற்கான உணவு கையிருப்பிலுள்ளதெனவும் உணவு விநியோகத்தில் எந்தவித இடையூறுமில்லை எனத் தெரிவித்தார். அப்படியாயின் நிலாவெளியில் மக்கள் நேற்று மதியத்திலிருந்து எந்தவித உணவுமில்லாமல் பட்டினியுடன் இருக்கிறார்களே எனக் கேட்டபோது, எல்லா முகாம்களையும் நாங்கள் கவனிக்க முடியாது என அவ் வதிகாரி இறுக்கமாகப் பதிலளித்தார். திருமலையிலும் விநியோகப் பணிகளில் பாகுபாடுகள் இருப்பதை அவதானித்த அப் பாராளுமன்ற உறுப்பினர் கொழும்புக்குத் திரும்பவென சீனன்குடா விமானநிலையத்திற்குச் சென்ற போது அங்கு பயணிகள் தங்குமிடத்திற்கு அண்மையிலுள்ள அறைகளிலெல்லாம் நிவாரணப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், அவர்களின் பாவனைக்குட் படுத்தப்பட்டிருப்பதையும் நேரடியாகவே கண்ணுற்றதோடு அது குறித்து அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளுடன் உரை யாடிய பின்னரே விமானத்தில் ஏறியதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## கனேடிய...

சர் ஆகியோரும் சென்றிருந்தனர். கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலை மைதானத்தில் உலங்குவானூர்தி மூலம் வந்திறங்கிய இவர்கள் அங்கிருந்து நேரடியாக கரையோரம் சென்று அழிவுகளையும் சேதங்களையும் பார்வையிட்டனர். பொது மக்களிடம் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர். பின்பு மொகமத் மகளிர் வித்தியாலயத்திற்குச் சென்ற இவர்கள் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களை சந்தித்ததோடு கனேடிய மருத்துவ சேவையையும் பார்வையிட்டனர். இதனையடுத்து கனேடிய உதவியுடன் மேற்கொள்ளப்படும் நீர் சுத்திகரிப்பு பணியையும் பார்வையிட்டனர்.

## புலிகளுக்கு...

பணம் பொருள் என்பனசரியாக பாவிக்கப்படுகிறதா என பலரும் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், அரசாங்கத்திற்கு கிடைக்கும் பணம் மற்றும் பொருட்களின் உதவிகளைவிட வேறு தனிப்பட்ட பிரிவுகளுக்கே அதிகளவிலான பணம் பொருட்கள் செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

## யாழ்...

வர் தங்கராஜ், யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, கலைப்பீடப்பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன், ஆசிரியர் சங்கத்தலைவர் அருள்வேல்,பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி கலைவிழி ஏற்றிவைத்தார்.

அதனை தொடர்ந்து பொங்குதமிழ் பிரகடனப்பலகை அமைந்துள்ள இடத்தில் பொங்குதமிழ் சுடரினை சர்வதேச மாணவர் பேரவை பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். பொங்குதமிழ் பலகைக்கான மலர் மாலையை பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தின் பொருளாளரும் வணிகத்துறை தலைவருமான தேவராஜ் அணிவித்தார். அதனை தொடர்ந்து புதிதாக அமைக்கப்படவுள்ள மாவீரர் நினைவாலயத்துக்கான அடிக்கல்லை துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் நாட்டினார். அதனைத் தொடர்ந்து தலைமை உரை இடம்பெற்றது. தொடர்ந்து பொங்கு தமிழ் தொடர்பான கவிதை ஒன்றினை சர்வதேச மாணவர் பேரவை உறுப்பினர் யசிந்தன் வழங்கினார். அதனைத்தொடர்ந்து சிறப்புரையை பேராசிரியர் மோகனதாஸ்,யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி,தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன்ஆகியோர் நிகழ்த்தினர். பொங்குதமிழ் பிரகடனமாகிய "எமது நிலத்தில் எமது பலத்தில் தங்கி நிற்போம்" எனப் பிரகடனத்தை நாடகமும்,அரங்கியலும் துறைத்தலைவர் கலாநிதி சிதம்பரநாதன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து பொங்கு தமிழ் எழுச்சிப்பாடசலை பெண்கள் பண்பாட்டு மையத்தினர் நிகழ்த்தினர். இந்நிகழ்வுகளில் பா.உ.கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பேரா சிரியர்கள்,பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள்,பாடசாலை மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர். (36)

## புவியியல்...

இந்த ஆராய்வுகள் பற்றி நில ஆராய்வு திணைக்களத்தினருக்கு வழங்கப்பட்ட பயிற்சியினை தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மக்கள் துயர்...

பின் உடனடியாக தாயகத்து மக்களுக்காக நாட்டிற்கு திரும்பி வந்து இரவு பகலாக பணியாற்றிக்கொண்டிருக்கும் அவர்களைப் பாராட்டிய தேசியத்தலைவர் எமது தேசம் இந்த அனர்த்தத்தின் விளைவிலிருந்து விரைவாக விடுபட எல்லாவிதமான வளங்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

தேசியத் தலைவர் அவர்கள் தனது உரையில், அழிவுகளும் இழப்புக்களும் எமது மக்களுக்குப் பரிட்சயப்பட்டுப் போனவை எனினும் சுனாமியினால் ஏற்பட்ட அதிகமான உயிரிழப்பும், இடப்பெயர்வும் என்பது இயற்கையின் சீற்றத்தால் மிகவும் குறுகிய நேரத்தில் நிகழ்ந்ததென்ற வகையில் அதிர்ச்சியானதொன்றாகவுள்ளது. கடந்த காலத்தில் இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளாலும் இராணுவ தந்திரோபாயங்களினாலும் எமது மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு இடம்பெயரவும் சொத்துக்களை இழக்கவும் நேரிட்டது. இது சர்வதேசமும் அறியப்படாமல் மௌனமாக எமது மக்களையும் தேசத்தையும் சிதைத்த முதலாவது சுனாமியாகக் காணப்படும் நிலையில் 26 ஆம் திகதி இடம்பெற்ற அனர்த்தம் எமது மக்களைப் பொறுத்தவரை இரண்டாவது சுனாமியே.

யுத்த காலத்தின் போதும் நெருக்கடியின் போதும் எம்மைப் பாதுகாத்த மக்கள் சுனாமி அனர்த்தத்தில் துயரத்திற்குள்ளானபோது எமது இயக்கத்தின் வளங்கள் யாவும் மக்களுக்காகவே உடனடியாகத் திருப்பப்பட்டு அவர்களது மீட்பு மற்றும் துயர்துடைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது எங்கள் முன்னுள்ள சவால், எமது மக்களின் துயர்களைத் துடைப்பதும் அவர்களைத் துரித கதியில் இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்வதன் மூலம் மக்கள் அடைந்துள்ள அதிர்ச்சியிலிருந்து விடுவிப்பதுமேயாகும். அதிலும் குறிப்பாக எமது குழந்தைகள், இளம் சிறார்கள் ஆகியோர் மிக மோசமான அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர் இவ்வனர்த்தத்தின் பின் அவர்களது உளநலத்தில் கூடிய அக்கறை கொள்ளவேண்டியது எங்களது முன்னுரிமையாக வுள்ளது. மரபு ரீதியான அணுகுமுறைகளை விடுத்து எமது குழந்தைகளை விரைவாக மகிழ்ச்சிகரமான எதிர்காலத்திற்கு இட்டுச்செல்லக் கூடிய புறச்சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டி யுள்ளது. விளையாட்டு மைதானங்கள், மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழல் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் அவர்கள் அடைந்த அதிர்ச்சி அனுபவத்திலிருந்து அவர்களை விடுவிக்கமுடியும்.

யுத்தத்தின் போதும் யுத்தம் சார்ந்த இலங்கை அரசின் நெருக்கடிகளினாலும் கடற்றொழில் வாய்ப்புக்களை இழந்துபோன எமது மக்களின் சமூகபொருளாதார நிலைமை தற்போது நிலவும் யுத்தமற்ற காலத்தில் ஓரளவிற்கு முன்னோக்கி நகர முற்பட்டாலும் அதுவும் தற்பொழுது இழக்கப்பட்ட வாய்ப்பாக மாறியுள்ளது. இந்நிலையில் கடந்த காலத்தில் எமது அமைப்பினால் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கென வழங்கப்பட்ட எல்லா சமூக மேம்பாட்டுக் கடன்களையும் உடனடியாக ரத்துச் செய்வதாகத் தீர்மானித்துள்ளோம். அதேவேளையில் அவர்களுடைய வாழ்க்கையில் விரைவான மாற்றத்தைக் கொண்டுவருவதற்காகத் துரிதப்படுத்தப்பட்ட முயற்சிகளினை மேற்கொள்ளுமாறு நான் உங்களையும் புலம் பெயர் நாடுகளில் வாழ்கின்ற அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக கடற்றொழில் உபகரணங்கள் மற்றும் வருமான ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல் மற்றும் தனிப்பட்ட முறையிலும் நிறுவன ரீதியாகவும் உடனடியாக முன்னெடுப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் சர்வதேச உதவிகள் வரும்வரை காத்திராமல் எமது மக்களின் வாழ்க்கையில் எங்களால் நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

எமது மக்கள் இந்த அனர்த்தத்தின் பின் நிவாரணங்களில் தங்கிவாழும் ஒரு சமூகமாக மாற்றப்படாமல் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பக்கூடிய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தற்போது கடைப்பிடிக்கப்படும் கல்விமுறைமை தேசத்திற்கானதோ வாழ்க்கைக்கானதோ கல்வியாக அமையாமல் ஓர் குறிப்பிட்ட உத்தியோகம் நோக்கிய கல்வியாக அமைவது சிதைவுகளிலிருந்து மீளெழும்பும் சமூகத்திற்குப் பொருத்தமற்ற அணுகுமுறையாகவே உள்ளது. எனவே கூடிய கவனத்தை இளஞ்சமூகத்தின் தொழிற்றிறன் மேம்பாடு நோக்கியும் திசைதிருப்பவேண்டியுள்ளது. நாங்கள் எதிர்நோக்கியுள்ள பாரியளவு கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதற்கு பொருத்தமான தொழில் நுட்பத்தை உடனடியாக் உட்கொண்டுவரவேண்டியிருப்பதோடு அவற்றை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் எமது மனிதவளம் பயிற்றுவிக்கப்படவேண்டியுள்ளது. அதற்கேற்றமுறையில் விரைவாக தொழிற்றிறன் பயிற்சிநெறிகள் அடையாளம் கண்டு ஆரம்பிக்கப்படவேண்டும்.

தலைவர் தனதுரையில் தொடர்ந்து குறிப்பிடும் போது, புனரமைப்பும் அபிவிருத்தியும் பாரியளவில் முன்னெடுக்கப்படும். தேசத்தில் எதிர்நோக்கப்படும் மற்றுமோர் சவால் இயற்கை வளங்களை எவ்வாறு சிறப்பான முறையில் பயன்படுத்துவதென்பதேயாகும். எமது மட்டுப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களை அதன் நீடித்த பயன்பாட்டிற்கு பங்கம் வராமல் பயன்படுத்துவதோடு மாற்று வளங்களையும் பொருத்தமான தொழில் நுட்பங்களையும் அடையாளம் கண்டு பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன்மூலம் இயற்கை வளங்களை எமது எதிர்கால சந்ததியினருக்கு சேதமற்ற முறையில் கையளிக்கமுடியும். கரையோரங்கள் இயற்கை அனர்த்தங்களின் இலக்குகளாக இருப்பதனால் அவற்றின் பாதுகாப்பும் வளப்படுத்தலும் மிகமுக்கியமான விடயமாக கவனத்திற்கொள்ளப்பட்டு சூழல் மேம்பாட்டுத் திட்டங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

கலந்துரையாடலின் போது அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல், குடிநீர் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திய தலைவர் எந்தவொரு சூழலிலும் மக்கள் சுகாதார ரீதியான சீர்கேடுகளுக்கோ தொற்று நோய்களுக்கோ உள்ளாகாமல் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தமைககாக அனைத்து வைத்தியர்களுக்கும், விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவினருக்கும், சுகாதார சேவை யினருக்கும்தனது பாராட்டைத் தெரிவித்ததோடுதொடர்ச்சியாக அந் நிலையைப் பேணுமாறும் கேட்டுக் கொண்டார்.

இன்னும் 5 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

Mega
கொம்யூட்டர் உயர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை
23-01-2005 ஞாயிறு
இலவச அனுமதிகளுக்கு
கணினியியல் கல்லூரி
(Affiliated to Asian)
யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது